Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00


# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

யாழ்.மக்களின் நன்மை கருதி
EXPO AVIATION
LION AIR
SERENDIB EXPRESS
யாழ். - கொழும்பு - யாழ்.
மூன்று விமானங்களுக்கான ரிக்கெற்றுக்களையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள...
ஹெப்பி இம்பெக்ஸ்
புதிய உயர் கல்லூரி
95, பருத்தித்துறை வீதி (ஆரியகுளம் முன்பாக)
யாழ்ப்பாணம். 021 - 2226144
24 மணி நேர சேவைக்கு 077-6038505
(சி-1096)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆவணி 10 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஜ.ஆகிர் 28 (27.08.2003) புதன்கிழமை இதழ்: 327

# புலிகளுடன் கலந்துரையாடுவதற்கு சொல்ஹெய்ம் பாரிஸுக்கு பயணம்!



நேற்று நடைபெற்ற நல்லைக் கந்தன் ஆலய இரதோற்சவத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டிருப்பதை படத்தில் காணலாம்.

## இடைக்கால நிர்வாகசபை குறித்து பேசுவார்

(கொழும்பு)

**வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகம் தொடர்பான, திட்டவரைபு குறித்து ஆராய்ந்து வரும் விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான - சர்வதேச சட்டவல்லுனர்களை, நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.**

இதற்காக எரிக் சொல்ஹெய்ம் நேற்று பாரிஸுற்கு பயணமாகியுள்ளார். அரசாங்கம் விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பித்துள்ள வட - கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகம் தொடர்பாக, பாரிஸ் சென்றுள்ள அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான அரசியல் விவகாரக் குழு சர்வதேச சட்டவல்லுனர்களுடன் ஆராய்ந்து வருகின்றது.

கடந்த 21 ஆம் திகதி ஆரம்பமாகிய இடைக்கால நிர்வாகத்திற்கான திட்டவரைபு தயாரிக்கும் பணி பூர்த்தியாகும் நிலையை எட்டியிருப்பதனால், தயாரிக்கப்பட்டுவரும் இடைக்கால திட்ட வரைபு குறித்து, இவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்துவதற்காகவே எரிக் சொல்ஹெய்ம் அங்கு சென்றுள்ளதாக நோர்வே வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

## பொலிஸ் ஆட்சேர்ப்பு நிலைப்பாட்டில் எந்தவிதமான மாற்றமும் இல்லை!

### பிரதமர் ரணில் - ஹக்கீமிடம் தெரிவிப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் பொலிஸ் சேவைக்குப் புதிதாக ஆட்களைச் சேர்த்துக்கொள்ளும் நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் இல்லை என்று, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளதாக - துறைமுக அபிவிருத்தி, கப்பல்துறை அமைச்சு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் நேற்று பிற்பகல் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை அலரி மாளிகையில் சந்தித்தபோதே - பிரதமர் இவ்வாறு கூறியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த விடயம் தொடாபாக, ஏதாவது யோசனைகளை முன்வைத்தால் - அவை குறித்தும் கவனம் செலுத்தப்படும் என்றும் பிரதமர் கூறியுள்ளார்.

இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வின் ஒரு அம்சமாகவும், அதே வேளை நீண்டகால செயற்திட்டமாகவும், நாடு முழுவதும் சமூக ரீதியிலான பொலிஸ் அமைப்பை ஏற்படுத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பியுடனான கூட்டணி; பொ.ஐ.மு.பேச்சு நடத்தாது!

### பொதுச் செயலாளர் டி.எம்.ஜெயரத்ன

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும், மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையில் ஏற்படுத்தப்படவுள்ள கூட்டமைப்பு தொடர்பாக, மேலும் பேச்சுவார்த்தை நடத்தப்படமாட்டாது என்று, பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயலாளர் நாயகம் டி.எம். ஜயரத்ன தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட கூட்டமைப்பு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடனேயே ஏற்படுத்தப்படவுள்ளதால், அது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த, பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு அவசியம் இல்லை என்று, பொது

(10 ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணாணம் விநாசியர்



எப்பிடியும் குழப்பிறதெண்டே இருக்கினம்.

## குற்றச்செயல்கள் குறித்து ஆராய ஜனாதிபதி ஆணைக்குழு அமைப்பு!

(கொழும்பு)

இலங்கையில் அதிகரித்துவரும் குற்றச்செயல்களுக்கான காரணங்களைக் கண்டறியும் பொருட்டு - மூவரடங்கிய ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நியமித்துள்ளார்.

குற்றச்செயல்கள் அதிகரிப்பதற்கான காரணங்களைக் கண்டறிந்து, அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறும், ஆணைக்குழுவுக்கு ஜனாதிபதி பணித்திருக்கிறார்.

இந்த ஆணைக்குழுவின் தலைவராக ஜனாதிபதி சட்டத்தரணியும், ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதியுமான எஸ்.டபிள்யூ.பி.வடுகொடபிட்டிய நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன், பொது நிர்வாகசேவை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சுகாதார சேவை ஊழியர்கள் வேலைநிறுத்தப் போராட்டம்

(கொழும்பு)

சுகாதார சேவை ஊழியர்களின் சுகயீன லீவு உட்பட அனைத்து விடுமுறைகளையும் - சுகாதார அமைச்சு ரத்துச்செய்த போதிலும், சம்பள முரண்பாடுகளைத் தீர்ப்பதில் அரசு கொடுத்த பரிந்துரைகளில் பல திருத்தங்கள் உள்ளதாகக் கூறி, அத்திருத்தங்களை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்து, அடையாள வேலைநிறுத்தம் ஒன்றை நேற்று சுகாதாரசேவை ஊழியர்கள் மேற்கொண்டனர்.

மகரகம புற்றுநோய் வைத்தியசாலை, கொழும்பு டி சொய்சா வைத்தியசாலை தவிர்ந்த, நாட்டின் சகல

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்கால நிர்வாக சபைக்கு எதிராக பிக்குகள் முன்னணி கண்டனக்கூட்டம்!

வடக்கு - கிழக்குப் பகுதியில் இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்துவதனை எதிர்த்து தேசிய பிக்குகள் முன்னணி எதிர்ப்புக் கூட்டமொன்றினை நடத்தியுள்ளது.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இந்தக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

விடுதலைப் புலிகள் இடைக்கால நிர்வாகத்தை தமது 'தமிழ்ஈழம்' என்ற கோட்பாட்டை அடைவதற்குப் பயன்படுத்துவார்கள். இது நீண்டகால நோக்கில் நாட்டின் ஒற்றுமைக்கு நன்மை தரக்கூடியதல்ல.

சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் நாட்டின் பாதுகாப்பு, இறையாண்மை ஆகியவற்றை மதிப்பளிக்க அரசு தவறிவிட்டது. இதன்மூலம் நிலையான வருங்காலத்தை அமைக்க அரசிற்கு இவைபோன்ற செயற்பாடுகள் வழி வகுக்கிறது.

வடக்கு - கிழக்குப் பகுதியில் இடைக்கால நிர்வாகம் அமைப்பதனை எதிர்த்து நாட்டின் ஐம்பது நகரங்களிலுள்ள 1500 புத்தவிகாரைகளில் எதிர்ப்புக் கூட்டங்கள் நடைபெறுமென இந்த முன்னணி அறிவித்துள்ளது.



எதிர்ப்புக் கூட்டத்துக்குச் செல்லும் பிக்குகள்.

## புலிகளிடம் இடைக்கால நிர்வாகமா? எதிர்த்து அம்பாறையில் ஆர்ப்பாட்டம்!

(அம்பாறை)

இடைக்கால நிர்வாகம் புலிகளுக்கு வழங்கப்படுவதை எதிர்த்து, இன்று காலை 10 மணிக்கு அம்பாறையில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடைபெறவுள்ளது.

கிழக்கைப் பாதுகாக்கும் அமைப்பு - இந்தப் பேரணிக்கு அழைப்பு விடுத்துள்ளது.

வடக்கு - கிழக்கை உடனடியாகப் பிரிக்கக் கோரியும், புலிகளுக்கு இடைக்காலநிர்வாகத்தை வழங்கக் கூடாதெனவும், மக்களை ஒன்றுபடுமாறு இந்த அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது. (07)

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 074512666 01360290 01360291
email . jaffna @ expoavi . com.
(சி -1139)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் தோழன்...

## முதலாம் ஆண்டு நிறைவையொட்டி

நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்
நடாத்தும்

# பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரைப்போட்டி

*உயர்தரப் பிரிவு* - (க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்கள்)

*தலைப்பு* - '21 ஆம் நூற்றாண்டில் அறிவியலின் வளர்ச்சி'

முதலாம் பரிசு - ரூபா 3,000
இரண்டாம் பரிசு - ரூபா 2,000
மூன்றாவது பரிசு - ரூபா 1,000

*கீழ்ப் பிரிவு* - (க.பொ.த. சாதாரண தரமும் அதற்குக் கீழ் கற்பவர்களும்)

*தலைப்பு* - 'சூழல் மாசடைதலைத் தடுப்பதில் நமது பங்கு'

முதலாம் பரிசு - ரூபா 3,000
இரண்டாம் பரிசு - ரூபா 2,000
மூன்றாவது பரிசு - ரூபா 1,000

### நிபந்தனைகள்

✧ கட்டுரைகள் சொந்த ஆக்கமாக இருத்தல் வேண்டும்.

✧ கட்டுரைகள் அனுப்பும் போது பாடசாலையில் கற்கும் தரம் குறிப்பிடப்பட்டு, அதிபரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

✧ கட்டுரைகள் ஆகக் குறைந்தது 300 சொற்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.

✧ கட்டுரைகளைத் தேர்ந்தெடுப்பதில் நடுவர்குழுவினது ஆசிரியரின் முடிவே இறுதியானது.

✧ கட்டுரைகள் "நமது ஈழநாடு" 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும்.

**போட்டி முடிவுதிகதி - 10.09.2003**

---

நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

## ஓராண்டு நிறைவையொட்டி நடத்தப்படும்

# சிறுகதை; கவிதைப் போட்டிகள்

**சிறுகதை** - முதலாம் பரிசு - 6,000 ரூபா
இரண்டாம் பரிசு - 4,000 ரூபா
மூன்றாவது பரிசு - 2,000 ரூபா

**கவிதை** - முதலாம் பரிசு - 6,000 ரூபா
இரண்டாம் பரிசு - 4,000 ரூபா
மூன்றாவது பரிசு - 2,000 ரூபா

### நிபந்தனைகள்

✧ எழுதுபவரின் சொந்த ஆக்கமாக இருக்க வேண்டும். ஏற கனவே பத்திரிகையிலோ, ஏனைய ஊடகங்களிலோ வெளி வராதவையாக இருக்க வேண்டும்.

✧ மொழிபெயர்ப்பு ஆக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

✧ கதைகள் ஈழநாடு பத்திரிகையின் ஒரு பக்கத்துக்குள் அடங்குவதாக இருக்கவேண்டும். தட்டச்சில் பொறிக்கப் பட்டவையாக இருந்தால் 5 பக்கங்களுக்குள்ளும் கையால் எழுதப்பட்டதானால் 7 பக்கங்களுக்குள்ளும் இருத்தல் வேண்டும்.

✧ கதைகள், கவிதைகள் சமகால, சமூகப் பிரச்சினைகளை மையமாக வைத்து எழுதப்படல் வேண்டும்.

✧ ஆக்கங்கள் யாவும் 10.09.2003 ஆம் திகதிக்குள் "நமது ஈழநாடு" 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.

✧ நமது ஈழநாடு பத்திரிகையில் கடமைபுரிபவர்களோ, அவர்கள் குடும்பத்தவர்களோ இப்போட்டியில் பங்குபற்ற முடியாது.

✧ பரிசுக்குரிய ஆக்கங்களை தேர்வு செய்வது நடுவர் குழுவினதும், ஆசிரியரினதும் முடிவாகும்.

---

## சிறுவர் இலக்கியப்போட்டி

ராஜாஸ் புத்தக நிலையத்தின் ஆதரவுடன்- எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் 11 ஆவது ஆண்டு நிறைவையொட்டி அகில இலங்கை ரீதியில் சிறுவர் இலக்கியச் சிறுகதைப் போட்டி நடத்தப்படவுள்ளது. வயது வேறுபாடின்றி போட்டிகளில் அனைவரும் கலந்துகொள்ளலாம். ஆக்கங்களை - ஐப்பசி மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பதாக, எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

## சிறுவிளம்பரம்

### இந்திய ஸ்தல யாத்திரை

யாத்திரையில் பங்குபற்ற விரும்புபவர்கள் 01.09.2003 இற்கு முன்பு பதிவு செய்துகொள்ளவும். 15.09.2003 அளவில் யாத்திரை ஆரம்பமாகும்.
தொடர்பு - ராகவேந்திர ஆலயம், நல்லூர். T.P-0777 110 329 (சி-461)

### மணமகள் தேவை

கொழும்பை சொந்த இடமாகக் கொண்ட இந்து உயர்குல 32 வயதுடைய (பட்டதாரி) அரசாங்க எழுதுவினைஞரான மகனுக்கு பெற்றோர் தகுந்த மணமகளை எதிர் பார்க்கின்றார்கள். (நட்சத்திரம் அவிட்டம் 3 ஆம் பாதம், உயரம் 5'6") சீதனம் எதிர்பார்க்கப்படும்.
தொடர்பு தொலைபேசி எண் - 012935797 (சி-462)



நிறைஞ்சனாஸ் சங்கானை
ஸ்ரீகாந், த்ரிஷா நடித்த
மனசெல்லாம்
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்
JUDGE AND JURY
இரவுக் காட்சி. 8.45 (பு.நே)
(சி-1285)

ராஜா யாழ்ப்பாணம்.
28 ஆம் திகதி வரை
விஜயகாந், கிரண் விவேக் நடித்த
தென்னவன்

காட்சிநேரம் 10.30, 2.30, 6.30, (பு.நே)
29 ஆம் திகதி முதல்
பாய்ஸ்
(சி-1284)


---

# கந்தனருள் இரந்து தீர்த்தமாடு!



செந்தமிழர் வளமோடு வாழ்ந்திருந்த நல்லைவளர்
கந்தனருள் நினைந்து தீர்த்தமாடு!
★ ★ ★
வந்ததுயர் போக்கியினி வருந்துயர்கள் விலகும் நல்லைக்
கந்தனருள் இரந்து தீர்த்தமாடு!!
★ ★ ★
சிந்தையெல்லாம் குகன்நினைவாய்ச் செயலெல்லாம் குகன்பணியாய்க்
கந்தனருள் சுரக்கத் தீர்த்தமாடு!!
★ ★ ★
வளம்மிக்க வாழ்விழந்தோம் மீண்டும்வள வாழ்வருளக்
குமரனருள் நினைந்து தீர்த்தமாடு!!
★ ★ ★
கந்தா வென்றழைத்த கணத்தினிலெம் அருகில்வரும்
கடம்பனருள் வியந்து தீர்த்தமாடு!!
★ ★ ★
வேண்டுவார் வேண்டுவன வேண்டும் வண்ணம் அருளுகின்ற
வேலனருள் வியந்து தீர்த்தமாடு!!
★ ★ ★
பட்டதெல்லாம் போதுமினித் தொட்டதெல்லாம் துலங்கும்படி
கடம்பனருள் சுரக்கத் தீர்த்தமாடு!!
★ ★ ★
கோடிசெல்வம் நாமிழந்தோம் ஓடியோடி நாமலுத்தோம்
குகனருளைச் சுரக்கத் தீர்த்தமாடு!!
★ ★ ★
கண்ணிழந்து கையிழந்து கருத்திழந்து தவிக்குமெமைக்
காக்கவருள் இரந்து தீர்த்தமாடு!!
★ ★ ★
கண்ணீரில் குளிக்குமெமைச் செந்நீரில் மிதக்குமெமைக்
காக்கும் வண்ணம் இரந்து தீர்த்தமாடு!!
★ ★ ★
மற்றவர்கள் எமையாளும் அவலநிலை தடுக்கும்வண்ணம்
முருகனருள் இரந்து தீர்த்தமாடு!!
★ ★ ★
தமிழரெனத் தலைநிமிர்ந்து தரணியிலே நாம்வாழ
குகனருளை இரந்து தீர்த்தமாடு!!
★ ★ ★
வருமாண்டில் இந்நாளில் எம்வாழ்வு வளம்கொழிக்க
முருகனருள் சுரக்கத் தீர்த்தமாடு!!
★ ★ ★
குறவள்ளி குஞ்சரியார் கணபதி சண்டேசுரரும்
குகனுமருள் சுரக்கத் தீர்த்தமாடு!!

**வயலூர் முருகன்**

---

# யாழ். மாநகரசபை
# மீள் கேள்வி அறிவித்தல் - 2003

கீழ் குறிப்பிட்ட வீதி வேலைகளுக்கான மீள் கேள்விகள் 'இக்ராட்' நிறுவனத்தில் தரம் '10' அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து என்னால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும் கடைசித்திகதி :- 3.9.2003 பி.ப. 3.00 மணி
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :- 5.9.2003 மு.ப. 10.00 மணி
மீள் கேள்விகள் திறந்து பரிசீலிக்கும் திகதி :- 5.9.2003 மு.ப. 10.30 மணி

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் யாவும் அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையில் வைக்கப்பட்டு, மாநகர ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் என முகவரியிடப்பட்டு, கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி திகதிக்குமுன்பு கிடைக்க கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும் அல்லது இதற்கென இவ்வலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடப்பட வேண்டும். கேள்விப்பத்திரத்தைக் கொண்டுள்ள கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும். கேள்விகள் திறந்து பரிசீலிக்கும் தினத்தில் கேள்வி சமர்ப்பித்தவர் அல்லது அவரது அங்கீகரிக்கப்பட் பிரதிநிதி சமூகமளிக்க முடியும். இது தொடர்பான மேலதிக விபரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| வேலையின் பெயர் | மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப்பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திர கட்டணம் வற் உட்பட |
|---|---|---|
| 1. கொழும்புத்துறை 1ம் குறுக்குத்தெரு | 2000/- | 300/- |
| 2. கொழும்புத்துறை 2ம் குறுக்குத்தெரு | 2000/- | 300/- |
| 3. கொழும்புத்துறை 4ம் குறுக்குத்தெரு (மதகு உட்பட) | 2000/- | 300/- |
| 4. உப்புக்குளம் வீதி, கொழும்புத்துறை | 2000/- | 300/- |
| 5. கொழும்புத்துறை 5ம் குறுக்குத்தெரு | 2000/- | 300/- |
| 6. அருளம்பலம் லேன் | 2000/- | 300/- |
| 7. பொன்னம்பலம் வீதி | 2000/- | 300/- |
| 8. சின்னாலன் கண்டு வீதி | 2000/- | 300/- |
| 9. குகன் வீதி | 2000/- | 300/- |
| 10. முள்ளி வீதி | 2000/- | 300/- |
| 11. ஆள்காட்டி லேன் | 2000/- | 300/- |
| 12. அம்பாள்வீதி, நாயன்மார்க்கட்டு | 2000/- | 300/- |
| 13. பெஸ்கி சனசமூகநிலைய ஒழுங்கை | 2000/- | 300/- |
| 14. தேவரிக்குளம் லேன் | 2000/- | 300/- |
| 15. சீனிவாசகம்வீதி | 2000/- | 300/- |

மாநகரசபை,
யாழ்ப்பாணம்
26.8.2003

(சி-1412)

இ.இராமலிங்கம்
மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

# மாகாணசபைத் தேர்தல் குறித்து ஆராய பொ.ஐ.முன்னணி மத்திய குழு கூடுகிறது



மாகாண சபைகளுக்கான தேர்தலை, குறித்த காலத்துக்கு முன்னர் நடத்துவதா அல்லது சபைகளின் ஆயுட்காலம் முடிவடைந்த பின்னர் நடத்துவதா எனபது குறித்து, பொது ஜன ஐக்கிய முன்னணியின் மத்திய குழு கூடி ஆராயவுள்ளதாகக் கட்சியின் பொதுச் செயலாளர் டி.எம். ஜெயரட்ண தெரிவித்தார்.

மாகாணசபைத் தேர்தல்கள் குறித்து முடிவுகளை எடுப்பதற்காக, பொ.ஐ.முன்னணியின் மத்திய குழு எதிர்வரும் செப்ரெம்பர் முதலாம் திகதி கூடவுள்ளது.

பொ.ஐ.முன்னணியிடமுள்ள ஆறு மாகாணசபைகளுக்கான தேர்தல், அடுத்த வருட முற்பகுதியில் இடம்பெறவேண்டும் என்பதால், கூட்டணியிலுள்ள கட்சிகள் - வேட்பாளர்களைத் தெரிவுசெய்யும் பணியை ஆரம்பித்துள்ளன. முன்கூட்டியே மாகாணசபைகளைக் கலைத்து, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தேர்தல் நடத்தலாம் என்பதால், வேட்பாளர்களைத் தெரிவுசெய்யும் பணியை இக்கட்சி ஆரம்பித்துள்ளது.

பொ.ஐ.மு. மத்தியகுழுக்கூட்டத்தில் - மாகாணசபைத் தேர்தல்கள் நடத்துவது குறித்து ஆராய்வதற்கு முன்னோடியாக, தமது கட்சியின் ஆட்சியிலுள்ள ஆறு மாகாணங்களின் முதலமைச்சர்களுக்கும் - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அனுப்பியுள்ள கடிதத்தில் - மாகாணசபைக்கு உடனடியாகத் தேர்தல்களை நடத்துவதா அல்லது ஆயுட்காலம் முடிந்த பின்னர் தேர்தல் நடத்துவதா நல்லது என்று தமது கருத்துக்களைத் தெரிவிக்குமாறு கேட்டுள்ளார்.

முதலமைச்சர்களின் கருத்தின் அடிப்படையிலேயே தேர்தல்கள் நடத்துவது குறித்து, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தீர்மானிப்பார் எனத் தெரியவருகிறது.

## சகோதரருக்கிடையான காணித் தகராறு கைகலப்பில் முடிவு!

(யாழ்ப்பாணம்)

காணித் தகராறு கைகலப்பில் முடிந்த சம்பவம் ஒன்று நல்லூரில் இடம்பெற்றுள்ளது. சகோதரர்கள் இருவருக்கிடையில் நீண்ட காலமாக நிலவிவந்த காணித் தகராறே கைகலப்பில் முடிந்ததில் தம்பி, அண்ணனைத் தாக்கிக் காயப்படுத்தினார்.

தாக்குதலுக்குள்ளானவர் - கையிலும் நெஞ்சுப் பகுதியிலும் பலமாகத் தாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் - சம்பந்தப்பட்ட தம்பிக்கு எதிராக, அண்ணன் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

## முஸ்லிம்களை ஆயுதமேந்த ஐ.தே.மு. வழிசெய்கின்றது!

### அனுரா பண்டாரநாயக்க குற்றச்சாட்டு

முஸ்லிம்கள் ஆயுதமேந்த, ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் வழிசெய்கின்றது. கிழக்கு முஸ்லிம்களின் பாதுகாப்பு நிலைமைகள் மோசமடைந்து வருகின்றது. இதற்கான பொறுப்புகளை, தற்போது ஆட்சியில் உள்ள அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவேண்டும் என, பொதுஜன ஐக்கிய முன்னணியின் கம்பகா மாவட்ட, நாடாளுமன்ற உறுப்பினர் அனுரா பண்டாரநாயக்க தெரிவித்தார்.

மல்வத்தை என்ற பிரதேசத்தில் அமைந்த சேனவத்தையில் இரண்டு முஸ்லிம் மக்கள் அண்மையில் கொல்லப்பட்டுள்ளார்கள். அரசு, முஸ்லிம்கள் மீதான தாக்குதல்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கத் தவறிவிட்டது.

மக்களின் கௌரவத்தையிட்டு ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதுவிதத்திலும் ஈடுபாடு கிடையாது. வடக்கு கிழக்கு மாத்திரம் அல்லாது, தெற்கும் சீரழிவுகளுக்கு உள்ளாகியிருக்கிறது.

1983 ஆம் ஆண்டில் - ஐக்கிய தேசியக் கட்சியினால் உருவாக்கப்பட்ட தமிழர்களுக்கெதிரான கசப்புணர்வு, 'ஜூலைக் கலவரத்துக்கு' வித்திட்டது.

அதேபோன்று- ஜே.வி.பியை அரசியலில் பங்குகொள்ளவிடாது தடுத்தமையே, ஆயுதக் கிளர்ச்சிக்குத் துணைபுரிந்தது. முஸ்லிம் மக்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கத் தவறினால், தம்மைப் பாதுகாப்பதற்கு அவர்கள் ஆயுதமேந்த வேண்டி ஏற்படலாம் என, அனுரா பண்டாரநாயக்க தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் நலன்களை மாத்திரம் கருத்தில் கொள்வதால், வடக்கு - கிழக்கில் முஸ்லிம்கள் ஆயுதமேந்த வழிவகுக்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## சுயவிருப்பின் பேரில் ஓய்வுபெறுவோரின் சுற்றறிக்கை திருத்தப்பட்டதால் ஊழியர்கள் பெரிதும் பாதிப்பு!

அரசாங்க திணைக்களங்கள், நியதிச்சபைகளில் இருந்து சுயவிருப்பின் பேரில் ஓய்வுபெறுவோர் பற்றிய சுற்றறிக்கை திருத்தம் செய்யப்பட்டதனால், பல அரச ஊழியர்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே நடைமுறையிலுள்ள சுற்றறிக்கையின் பிரகாரம், ஓய்வு பெறும் வயது 60 ஆகக் கணிக்கப்பட்டு, நஷ்டஈட்டுத்தொகை வழங்கப்பட்டுவந்தது.

தற்போது திருத்தம் செய்யப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம், ஓய்வு பெறும் வயதெல்லை அவர்களது நியமனக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளவாறு, 55 ஆக அல்லது 60 ஆகக் கணிக்கப்பட்டு, நஷ்டஈடு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், 1975 ஆம் ஆண்டின் பின்னர் அரச சேவையில் உள்வாங்கப்பட்ட 55 வயதில் ஓய்வுபெறவேண்டிய ஊழியர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக, சம்பந்தப்பட்ட ஊழியர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

## சமரச முயற்சிகளுக்கு அப்பாலும் கண்காணிப்புக்குழு செயற்படவேண்டும்!

### சர்வதேச மன்னிப்புச்சபை கோருகிறது

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு - அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமரசம் செய்வதுடன் மட்டும் நின்றுவிடாமல், இதற்கு அப்பாலும் செயற்படவேண்டும் என்று, சர்வதேச மன்னிப்புச் சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சமரச நடவடிக்கைக்கு அப்பாலும செயற்படுவதற்கு ஆட்பற்றாக்குறையைக் கண்காணிப்புக்குழு எதிர்நோக்கினால், நோர்வே அரசாங்கத்தின் மூலம் இதற்குத் தீர்வு காணலாம் எனவும், சர்வதேச மன்னிப்புச் சபை அதிகாரி தெரிவித்துள்ளார்.

## கிழக்கு பொலிஸ் ஆட்சேர்ப்பு; நேர்முகத்தேர்வுக்கு 2000 பேர்!

(கொழும்பு)

தமிழ்க் கட்சிகள் எதிர்த்தாலும், அதைப் பொருட்படுத்திக் கொள்ளாமல், அரசு - கிழக்கிலங்கையில் மேற்கொண்ட பொலிஸ்படைக்கான நேர்முகத் தேர்வில், இரண்டாயிரம் பேர் கலந்துகொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த 2000 பேரில், சிங்கள இனத்தவர்கள் கூடிய அளவிலும், முஸ்லிம் இனத்தவர் அதற்கடுத்த நிலையிலும், மிகக்குறைந்த அளவில் சில தமிழ் இளைஞர்களும் கலந்துகொண்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கிழக்கில் இடம்பெற்ற இரு முஸ்லிம் இளைஞர்களின் கொலைகளைச் சாட்டாக வைத்து, முஸ்லிம் அரசியல்வாதிகள் கொடுத்த அழுத்தத்தை ஏற்றுக்கொண்டு, ரணில் அரசு புதிதாக அமைப்பதற்கு, இணங்கிய 500 பொலிஸ் உத்தியோகத்தர்களையும், 50 பொலிஸ் இன்ஸ்பெக்டர்களையும் உள்ளடக்கிய புதிய பொலிஸ்படைக்கான நேர்காணல், கடந்த சில நாட்களாக இடம்பெற்றது.

முதல் இரண்டு நாட்களிலும், கிழக்கு மாகாணத்தில் 2000 இளைஞர்கள் கலந்து கொண்டதாகவும், இதிலே 98 வீதமானவர்கள் சிங்கள இளைஞர்கள் என்றும், இரண்டாவது நிலையில் சிங்களத்தை முதல் மொழியாகக் கொண்ட முஸ்லிம் இளைஞர்களே அடங்கியிருந்ததாகவும் கிழக்கிலங்கை செய்திகள் தெரிவிக்கின்றன.

## இ.தொ.கா. முக்கியஸ்தர்கள் மீண்டும் ஐ.தே.கட்சியில்!

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா தலைமை தாங்கும் பொ.ஐ.முன்னணியில் இதுவரை காலமும் அங்கம் வகித்த, ஐந்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர்கள் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சிக்கு மாறியுள்ளனர்.

ஐ.தே.கவுக்கு மாறியுள்ள பி.பி. தேவராஜ், டி.எம்.ராஜன் ஆகியோர் தேசியப் பட்டியலிலும், ரி.வி.சென்ன், எஸ்.சதாசிவம், ஆர்.ராஜரட்ணம் ஆகியோர் தங்களது பிரத்தியேகத் தொகுதிகளிலும், ஐக்கிய தேசியக் கட்சியின் ச்ர்பில் எதிர்வரும் தேர்தலில் போட்டியிடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னைய நாடாளுமன்றத்தில் ஒன்பது ஆசனங்களை வைத்திருந்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சி, அப்போது ஐக்கிய தேசியக் கட்சியில் அங்கம் வகித்தாலும், பின்னர் அக்கட்சியிலிருந்து விலகி, சந்திரிகா தலைமையிலான பொ.ஐ. முன்னணியில் இணைந்து கொண்டது.

பின்னர் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டபோது பொ.ஐ.முன்னணியிலேயே தொடர்ந்தும் அங்கம் வகித்த இவர்கள், தற்போது மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டுள்ளதுடன், எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட முன்வந்துள்ளனர்.

## பொ.ஐ.முன்னணி ஆட்சியை ஏற்படுத்த அனைவரும் ஒன்றிணைய வேண்டும்!

### எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ

அரசாங்கத்தினால், கடந்த பொதுத் தேர்தலின்போது, மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமற்போயுள்ளதாக, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

தெரணியகலையில் இடம்பெற்ற, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதேசமட்ட சம்மேளனத்தின் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தமது எல்லா குறைகளையும், சமாதான முன்னெடுப்புக்களைக் காரணங்காட்டி - அரசாங்கம் மறைத்துக் கொள்வதாகவும் அவர் கூறினார்.

அப்பாவிப் பொதுமக்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதாகக் கூறிய அரசாங்கம், அவர்களை மேலும் கஷ்டங்களுக்கு உள்ளாக்கியுள்ளது.

இவ்வாறான சூழ்நிலையில் - சிறிலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சியை ஏற்படுத்த, சகல இன மக்களும் ஒன்றிணைய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.



அரசாங்கத்துக்கும், சமாதான முயற்சிகளுக்கும் எதிராக, ஜே.வி.பியினர் நேற்றுமுன்தினம் காலியில் ஆரம்பித்த நான்குநாள் பாதயாத்திரையில் சில காட்சிகள்.

# பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் போராட்டத்திற்கு இலங்கை ஆசிரியர் சங்கமும் ஆதரவு தெரிவிப்பு!

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தமக்கு நிரந்தர நியமனம் கிடைக்கும்வரை, வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ள பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கு - இலங்கை ஆசிரியர் சங்கத்தினர் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் -

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களில் பலர் - உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் தேசிய ஆங்கில டிப்ளோமா பட்டம் பெற்றும், உரிய தகமைகளைப் பெற்றிருந்தும்கூட, கடந்த பத்து ஆண்டுகளுக்கும் மேலாக 80 ரூபா சம்பளத்தை நாளொன்றுக்குப் பெற்று, ஆசிரியர்கள் செய்யும் வேலைகளைச் செய்து, வேலைப்பளுவை அவர்களும் சுமந்து கொண்டிருப்பது மிகப்பெரும் குறைபாடாகும்.

நாட்டில் நிலவுகின்ற ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறையை நீக்குவதற்கு, உடனடியாகப் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களில் - உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் தேசிய ஆங்கில டிப்ளோமா பட்டம் பெற்றோர், க.பொ.த உயர்தர பரீட்சையில் ஆங்கில பாடத்தில் சித்தி பெற்றோர், க.பொ.த சாதாரண தரத்தில் ஆங்கிலத்தில் விசேட சித்தி, திறமைச் சித்தி பெற்றோர், ஆங்கில இலக்கியப் பாடத்தில் சித்தி பெற்றோர் போன்றவர்களை உடன் நிரந்தரமாக்குமாறு கோரி, கல்வி அமைச்சிற்கு எமது பலத்த அழுத்தத்தை தெரிவித்து, பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களின் போராட்டத்திற்கு எமது ஆதரவையும், அவர்களது போராட்டம் வெல்ல - எமது ஆசிகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம் என, அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வடக்கு - கிழக்கில் கண்ணிவெடி அகற்றுவதற்கு சுவீடன் அரசும் நிதியுதவி!

யுத்த நடவடிக்கைகளின்போது, வடக்கு - கிழக்கில் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகளை அகற்றுவதற்காக, சுவீடன் அரசாங்கம் 114 மில்லியன் ரூபாவை நிதியுதவியாக வழங்கியுள்ளது. 2003 - 2004 ஆம் ஆண்டுக்கான கண்ணிவெடியகற்றும் வேலைகளுக்கு - இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

'சீடா' நிறுவனத்தின் ஊடாகச் சுவீடன் அரசாங்கம் இந்த நிதியை வழங்கியிருக்கின்றது.

யுத்தத்தால் வடக்கு - கிழக்கில் இடம்பெயர்ந்தவர்களை மீளக் குடியேற்றும் நோக்கில், இந்த நிதி வழங்கப்பட்டுள்ளது.

## தனியார் பஸ் உரிமையாளர்கள், சாரதிகளுக்கான நடமாடும் சேவை இவ்வார இறுதிக்குள் நடக்கும்!

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் பஸ் உரிமையாளர்கள், சாரதிகள் ஆகியோரின் நன்மைகருதி, தனியார் போக்குவரத்துத் துறையினரின் நடமாடும் சேவையொன்று இவ்வார இறுதிக்குள் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இதில் பல உயரதிகாரிகளும் கலந்துகொள்ளவுள்ளனர்.

யாழ்.மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நடமாடும் சேவையில்- வாகனப்பதிவுப் புத்தகங்கள், உரிமை மாற்றம் தொடர்பான விடயங்கள், சாரதி அனுமதிப் பத்திரங்கள் பற்றிய விடயங்கள் குறித்து ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, யுத்த அனர்த்தங்களின்போது - சேதமடைந்த தனியார் பஸ்களின் உரிமையாளர்களுக்கு உதவிக் கொடுப்பனவுகள் வழங்குவது பற்றி ஆலோசிக்கப்பட உள்ளதாகவும், சம்பந்தப்பட்டவர்கள் உரிய ஆதாரங்களோடு - யாழ்.சிற்றூர்திச் சேவைச்சங்கத் தலைமைக் காரியாலயத்திற்குச் சமுகம் தருமாறும் சங்கத்தினர் கேட்டுள்ளனர்.

நீண்டகால இடைவெளிக்குப் பின் தனியார் சாரதிகள், நடத்துநர்களுக்கு அடையாள அட்டையும், நேரக் கணிப்பாளர்களுக்குச் சீருடைகளும் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சமூகச்சீரழிவில் ஈடுபட்ட ஐந்துபேர் கலாசாரத்தை பேணும் குழுவிடம்!

### எச்சரிக்கையின் பின் விடுவிப்பு

(மல்லாகம்)

புன்னாலைக்கட்டுவன் தெற்கில் சமூகச் சீரழிவு நடவடிக்கையில் ஈடுபட்ட இரு பெண்கள் உட்பட, ஐந்து பேரை - கலாசாரத்தைப் பேணும் இளைஞர் குழுவினர் பிடித்து, கடும் எச்சரிக்கை செய்த பின் விடுவித்தனர்.

மேற்படி இரு பெண்கள் தாயும் மகளும் எனத் தெரியவருகிறது. ஏனைய மூன்று இளைஞர்களும் முறையே 17,18,19 வயதுடையவர்களாகும். சம்பவதினம் பொதுமக்களின் தகவலையடுத்தே, அவர்களுடைய வீட்டைக் கலாசாரத்தைப் பேணும் குழுவினர் முற்றுகையிட்ட போது, மேற்படி ஐவரும் சிக்கினர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (68)

## சர்வதேச செஞ்சிலுவை சங்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு கோரிக்கை!

கீழே பெயர் குறிப்பிடப்பட்டவர்களை - சர்வதேச செஞ்சிலுவைக் குழுவுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

பாலன் நஞ்சினி (தேவிகாலிங்கன் தியேட்டர் அகதிமுகாம், இணுவில் அல்லது சுப்பர்மடம் - பருத்தித்துறை), தேவசகாயம் ராணிமலர் (இணுவில் ஆஸ்பத்திரி அகதி முகாம் - இணுவில்), பிரேமராஜா ராஜேஸ்வரி (6, 3 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்), வேலாயுதம் சத்தியபாமா (அளவெட்டி தெற்கு, அளவெட்டி), குணரட்ணம் பாக்கியம் (கொம்பனிபுலம், அளவெட்டி), சேவியர் பிரான்சிஸ்கா (112, மணியம்தோட்டம், கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்).

## கசிப்பு உற்பத்தி வழக்கு; நால்வருக்கு அபராதம்!

### யாழ். நீதிமன்று விதித்தது

சட்ட விரோதமாகக் கசிப்பு உற்பத்தி செய்த நான்கு பேருக்கு, ஐம்பதினாயிரம் தண்டப்பணம் செலுத்தும்படி நீதிமன்றம் உத்தரவிட்டது. நேற்று யாழ். நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா இந்த உத்தரவை பிறப்பித்தார்.

சுதுமலை தெற்கைச் சேர்ந்த ஒருவருக்கும், ஐந்து சந்தி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவருக்கும், அபூபக்கர் வீதி - யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவருக்கும் - தலா பத்தாயிரம் ரூபா தண்டப்பணமும், தலா இரண்டாயிரம் ரூபா தர்மப் பணமும் செலுத்தும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஆறுகால்மடம்- ஆனைக்கோட்டைச் சேர்ந்த ஒருவருக்கு 20,000 ரூபா தண்டப்பணமும், 5000ரூபா தர்மப்பணமும் செலுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இவர்கள் நால்வரும் தமது தர்மப் பணத்தினை - இருபாலை கனான் சிறுவர் இல்லத்திற்குச் செலுத்தும்படியும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.




2 ஆவது உலக இந்து மகாநாடு 02.05.2003 திகதி தொடக்கம் 10.05.2003 திகதிவரை - புத்தூர் கிழக்கு ஈஸ்வரன் தேவஸ்தானத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இறுதி நாள் நிகழ்வில் கோப்பாய் பிரதேச செயலர் எஸ்.ஸ்ரீனிவாசனும், கலாசார உத்தியோகத்தர் மாலினியும் குத்து விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும், பிரதேச செயலரின் அருகில் புத்தூர் கிழக்கு கிராம அலுவலர் க.வைத்தியநாதன் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## சின்னஞ்சிறு செய்திகள்

### மாணவர் தலைவர்களுக்கான பயிற்சி

(வடமராட்சி)

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளிலுள்ள மாணவர் தலைவர்களுக்கு, தலைமைத்துவப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

எதிர்வரும் 3 ஆம் திகதி நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் இப்பயிற்சி வழங்கப்படவுள்ளது.

### துர்நடத்தையில் ஈடுபட்டோர் பிடிபட்டனர்!

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் யாழ்.புகையிரத நிலையப்பகுதியில் தகாத நடவடிக்கையில் ஈடுபட முற்பட்ட இரு இளைஞர்களையும், யுவதி ஒருவரையும் - விழிப்புக் குழுவினர் மடக்கிப்பிடித்தனர்.

இவர்கள் மூவரும் கலாசாரத்தைப் பேணும் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

### மருதங்கேணிப் பாடசாலைகளுக்கு தளபாடம் விநியோகம்

(ஆழியவளை)

மருதங்கேணிப் பகுதிப் பாடசாலைகளுக்கு மேலும் ஒரு தொகுதி தளபாடங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் நிகொட் நிறுவனத்தினரால் மூன்று லொறிகளில் கொண்டு வரப்பட்ட தளபாடங்கள் - மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் இறக்கிவைக்கப்பட்டுள்ளன.

இன்னும் ஓரிரு தினங்களில் பாடசாலைகளுக்கு, இவை பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை, கடந்த சில மாதங்களுக்கு முன்னர் ஆரம்பக் கல்வி மாணவர்களுக்குரிய ஒரு தொகுதி தளபாடங்கள் பாடசாலைக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (122)

### மாதர் சங்கங்கள் புனரமைப்பு

(ஆழியவளை)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சகல மாதர் சங்கங்களும் புனரமைப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியாக, மேற்படி சங்கங்கள் புனரமைக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (122)

### சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம்

அல்வாய் வடக்கு மாணிக்கம் பற்று சித்திவிநாயகர் ஆலய வருடாந்த, மஹோற்சவம் எதிர்வரும் 31 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

## பாடசாலை மாணவர் சீருடை, புத்தகங்களுக்கு நூற்று முப்பத்து ஆறு கோடி ரூபா ஒதுக்கீடு!

அடுத்துவரும் ஆண்டில் பாடசாலை மாணவர்களுக்கு இலவச பாடநூல்கள் வழங்குவதற்கும், இலவச சீருடைகள் வழங்குவதற்கும் என அரசாங்கம் 136 கோடி 40 இலட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இந்த ஒதுக்கீட்டின்படி - இலவச சீருடைக்கு 75 கோடி ரூபாவும், இலவச பாடநூல்களுக்கு 61 கோடி 40 இலட்சம் ரூபாவும் கிடைக்கவுள்ளது.

இலவசச் சீருடைகளுக்குத் தேவையான துணியில் 50 வீதம் சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படவுள்ளது. எஞ்சிய பகுதி, உள்ளூர் முகவர்களிடம் இருந்து கொள்வனவு செய்யப்படவுள்ளது.

இலவச பாடநூல்களை வழங்குவதற்கு எனப் பாடநூல்களை அச்சிடும் வேலைகள் - அரச அச்சகக் கூட்டுத்தாபனம், அரசாங்க அச்சகத் திணைக்களம் உட்பட மேலும் 25 தனியார் அச்சகங்களிடமும் ஒப்படைக்கப்படவுள்ளது.

## பஸ் - ஆட்டோ விபத்து

யாழ்ப்பாணம் மனோகராச் சந்தியில் நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் ஆட்டோ ஒன்று பஸ்ஸுடன் மோதியதில் பலத்த சேதம் அடைந்தது.

தென் இலங்கையில் இருந்து சுற்றுலாப் பயணிகளை ஏற்றிக்கொண்டு வந்த இந்த பஸ், யாழ்.நகரில் இருந்து காங்கேசன் துறை வீதி வழியே சென்றுகொண்டிருந்தபோது, நாவலர் வீதி வழியே வந்த ஆட்டோ பஸ்ஸுடன் மோதி விபத்துக்குள்ளாகியது. சம்பவ இடத்துக்கு வந்த போக்குவரத்துப் பொலிஸார் இரு பகுதியினரையும் சமரசம் செய்துவைத்தனர்.

இந்தச் சம்பவத்தில் எவரும் காயமடையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (52)

வாழ்க வளமுடன்
HAPPY BIRTHDAY
ஐந்தாவது அகவையில்



பெயர் : கோ.குமரன்
முகவரி: சங்கக்கடை வீதி, துன்னாலை.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்
சிறாரின் பெயர்:------------------------------
முகவரி :------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
------------------
பெற்றார் ஒப்பம்

...ிவு எவ்வளவு?
2. 700 ரூபா. 3. 1000 ரூபா. 4. 370 ரூபா.
...றைந்து வழங்குவதற்கு ஏதுவான கணக்கு.
...ணக்கு. 2. கேள்விக் கணக்கு.
...வைப்புக்கணக்கு. 4. மேற்கூறியவை யாவும்.
...முறை ஒன்றில் அடிப்படைக் கூறுகள் தொடர்
...தமற்றது.
2. ஊடகம். 3. வசதி. 4. நிலையம்.
...ருள் காப்புறுதிக் கோட்பாடொன்றாக அமை
...பிக்கை. 2. காப்புறுதி செய்யும் உரிமை.
...உத்தரவாதம். 4. காப்புறுதியின் பெறுமானம்.
...த் தொடர்பாடல் ஊடகமாகக் குறிப்பிடக்
... உலக ஒளிபரப்பு.
... ஒளிபரப்பு.
...னல் (Inter Net) அமைப்பு.
... டிஸ்கவரி அலைவரிசை.
...ரிமைகளில் ஒன்று அல்லாதது.
... எச்சரிக்கும் உரிமை.
...யும் உரிமை.
... உரிமை.
... அறிந்து கொள்ளும் உரிமை.
... தரநிர்ணய சான்று வழங்கும் நிறுவனம்.
...ல், விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகம்.
... கட்டளை நிறுவனம்.
...ில் அபிவிருத்திச் சபை.
... சபை.
...மைக்கப்பட்ட) முதலீட்டு வழிகள் அல்லாதது.
...பு. 2. திறைசேரிமுறி.
4. திறைசேரி உண்டியல்.
...ொடர்பான சுட்டிகளை (INDEX) வழங்கும்
...மேற்கொள்வது.
2. மத்தியவங்கி.
...ந்தை. 4. பங்குப் பரிமாற்றகம்.
...கிச் சேவையல்லாதது.
...ளை ஏற்றல். 2. குத்தகைச் சேவை.
...னச்சேவை. 4. ஒப்புறுதிச் சேவை.
...கக்கூற்றில் இடம்பெறும் காரணி அல்லாதது.
...சோலை.
... மறுத்த காசோலை.
...த காசோலை.
...றில் தவறுதலாகச் செலவில் காணப்பட்ட
...ருக்குரிய தொகை.
...ரதான கூறுகளாய் அமைவது.
...ட் கிரயம், நேர் கூலிக் கிரயம், நேர் செலவுக்
...ட் கிரயம், நேர் கூலிக் கிரயம், நேரிற் கிரயம்.
...ட் கிரயம், நேர் செலவுக் கிரயம், நேரிற்
...ரயம், நேரிற் செலவுக் கிரயம்.
...ட் கிரயம், நேர் கூலிக் கிரயம், நேர் செலவுக்
...ரிற் கிரயம்.
...பொருள் இருப்பு 10,000 ரூபா, மூலப் பொருட்
...50 ஆயிரம் ரூபா, மின்சாரம் 6,000 ரூபா, உட்
...4,000 ரூபா, நேர்ச் செலவு 10,000 ரூபா, இறுதி
...இருப்பு 14,000 ரூபா.
...எவ்வளவு?
... 2. 50,000 ரூபா.
... 4. 54,000 ரூபா.

**...குப்பு: V.பிரகலாதன்**

--- இங்கே மடிக்கவும் ---

# மாணவர் மலர்

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை

### மாணவருக்கான முன்னாயத்தப் பயிற்சிகள்

☞ இப்பகுதியை வாசித்து இல. 1 முதல் 17 வரையுள்ள வினாக்குரிய விடைகளை புள்ளிக்கோட்டின் மித எழுதுக.

> **மரக்கிளையின் மேலிருந்த மாம்பழக்குருவியானது, மலரப் போகும் ஒரு மொட்டைப் போன்று காட்சி அளித்தது. இடையிடையே தன் தலையை அசைத்து சுற்றும் முற்றும் பார்த்த குருவி, ஆபத்து என எண்ணும் எதனையும் காண வில்லை. எனினும், துரதிஷ்டமாக அக்குருவி பார்க்காத ஒரு பக்கம் இருந்தது. அது சிறிதேனும் அப்பக்கத்தைப் பார்த்திருந்தால், தன்னை இரையாக்குவதற்கு, தனக்கு மிக அருகில் குறி பார்த்திருக்கும் சாரைப் பாம்பைக் கண்டிருக்கும். பழைய தேய்ந்த சைக்கிள் ரயரைப் போன்ற, கறுப்பு நிறமான சாரைப்பாம்பு - சிறிய பூ மொட்டைப் போன்ற மாம்பழக்குருவியை அவ்வேளையில் பிடித்துக் கொண்டது. குருவி கீச், கீச் எனப் புலம்பியது.**

1) இப்பந்தியில் குறிப்பிடப்பட்ட ஒரு பிராணி சாரைப்பாம்பு ஆகும். இங்கு குறிப்பிடப்பட்ட இன்னொரு பிராணியின் பெயரை எழுதுக. (....................)
2) சாரைப்பாம்பு எங்கே இருந்தது? (....................)
3) சாரைப்பாம்பு என்ன செய்தது என்பதை உமது வசன நடையில் எழுதுக?
(...........................................................)

☞ கீழே தரப்பட்டுள்ள சொற்களில் பன்மைச் சொற்களை எழுதுக?

4) கிளை ..............................
5) பிராணி ..............................
6) மேலே ..............................
7) கறுப்பு ..............................

☞ கீழே தரப்பட்டுள்ள சொற்களின் ஒத்த கருத்துச் சொற்களை எழுதுக?

8) மொட்டு ..............................
9) நிறம் ..............................

☞ மேலே தரப்பட்டுள்ள பந்தியில் அடைமொழிச் சொற்கள் இரண்டு எழுதுக?

10) ..............................
11) ..............................

☞ மேலே தரப்பட்டுள்ள பந்தியில் உள்ள உவமைகள் இரண்டு எழுதுக?

12) ..............................
13) ..............................

☞ கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு சொல்லுக்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை (ஆங்கில எழுத்துக்களில்) எதிரே உள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக?

14) பறவை ..............................
15) மலர் ..............................
16) தலை ..............................
17) கண் ..............................

☞ கீழே தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து வினா 18 முதல் 28 வரையிலான வினாக்களுக்கு விடைகளை எழுதுக?

> **கோகுலம் ஆரம்பப் பாடசாலையின் மாணவனான இந்திரன், கெட்டிக்காரச் சிறுவன். பத்து வயதுடைய அவன், ஐந்தாம் தரத்தில் கல்வி கற்கிறான். குடும்பத்தில் மூத்தவனான அவனுக்கு - ஆனந்தி என்னும் சகோதரியும், ஆனந்தன் என்னும் சகோதனும் உள்ளனர். சித்தார்த்தன் என்ற பெயருடைய அவனின் அப்பா ஒரு விவசாயி. மாலினி என்ற பெயருடைய அவனது அம்மா - வீட்டு வேலைகள் செய்வதிலும், பிள்ளைகளைப் பராமரிப்பதிலும் முழுநாளையும் செலவழிப்பார்.**

☞ இப்பந்தியின் பிரதான நபர் பற்றிய விவரங்களைத் தரப்பட்டுள்ள அட்டைப்பத்திரத்தில் எழுதி நிரப்புக.

#### அட்டைப்பத்திரம்

18) முழுப் பெயர் : ..............................
19) வயது : ..............................
20) தந்தையின் பெயர் : ..............................
21) தந்தையின் தொழில் : ..............................
22) தாயின் பெயர் : ..............................
23) தாயின் தொழில் : ..............................
24) குடும்பத்திலுள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை : ..............................

☞ கீழே தரப்பட்டுள்ள ஒவ்வோர் ஆங்கிலச் சொல்லுக்கும் பொருத்தமான தமிழ்ச் சொல்லை - மேலுள்ள பந்தியில் இருந்து தெரிந்து புள்ளிக் கோட்டில் எழுதுக?

25) **Child** (..............................)
26) **Farmer** (..............................)
27) **Grade** (..............................)
28) **Clever** (..............................)

☞ கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றும் சரியாயின் சரி அடையாளத்தையும், பிழையாயின் பிழை அடையாளத்தையும், எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக?

29) நுளம்புகள் விரும்பி உண்ணும் ஒரு செடி - துளசி ஆகும். (..............................)

19. தனிவியாபார உரிமையானது மிக அதிகளவில் பரந்திருப்பதற்கான காரணம் யாது?
1. பதிவு செய்வது முக்கியமல்ல என்பதால்.
2. வியாபாரத்தைக் கொண்டு நடத்துவது இலகு என்பதால்.
3. தீர்மானம் எடுப்பதில் பிரச்சினைகளில்லை என்பதால்.
4. உரிமையாளர் எல்லையற்ற இலாபத்துக்கு உரித்துடையவர் என்பதால்.

20. பங்குடைமை ஒன்று நிலைத்திருப்பதனை (சிறப்பாக) உறுதிப்படுத்தக்கூடியதாக இருப்பது.
1. பங்காளர் மூலதனத்திற்குச் சமமான பங்களிப்பைச் செய்யும்போது.
2. எலலாப் பங்காளரும் உற்சாகமாக முகாமைத்துவத்தில் ஈடுபட்டிருக்கும்போது.
3. எழுதப்பட்ட ஒப்பந்தம் ஒன்றின் மூலமாகப் பங்குடமையில் இணைவதனால்.
4. பங்குடமையைப் பதிவு செய்வதனால்.

21. வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனி ஒன்று அதிகளவு மூலதனத்தைச் சேர்த்துக் கொள்ளக்கூடிய நிலையில் இருப்பதற்கான காரணம்
1. இது ஒரு சட்டபூர்வ அமைப்பாக இருப்பதாகும்.
2. அங்கத்தவர் எண்ணிக்கையில் எல்லையில்லாமல் இருப்பதாகும்.
3. பங்குதாரர்களது பொறுப்பு வரையறுக்கப்பட்டதாக இருப்பதாகும்.
4. இது தொகுதிக்கடன்களை வழங்குவதற்கு அதிகாரம் இருப்பதாகும்.

22. கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்பான பிழையான கூற்று யாது?
1. இலாப நோக்கமற்றது.
2. அங்கத்தவர் நலனுக்கு முன்னுரிமை வழங்குவது.
3. சமூக சேவையிலும், பொதுநல சேவையிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டுள்ளது.
4. குறித்த ஒரு குழுவுக்கு அல்லது பிரதேசத்துக்கு அங்கத்துவமானது.

23. பின்வரும் முகவர்களின் மிகுந்த அதிகாரத்தைத் தன்னகத்தே கொண்டிருப்பவர்.
1. ஏலவர். 2. காரணிகர்.
3. தரகு முகவர். 4. பொறுப்பு முகவர்.

24. அரச அமைப்புக்கள் தமக்குரிய பொருட்களை வாங்க, விற்க பின்பற்றும் பொதுவானமுறை.
1. கேட்பு விற்பனை. 2. ஏல விற்பனை.
3. நேர் விற்பனை. 4. கடன் விற்பனை முறை.

25. சில்லறைக் காசேட்டு முற்பண முறைமை என்பதால் கருதப்படுவது.
1. சில்லறைக் காசாளருக்கு முற்பணம் வழங்குதல்.
2. சில்லறைக் காசாளர் செலவுகளுக்கு முற்பணம் வழங்கல்.
3. சில்லறைக் காசாளர் குறிப்பிட்ட வரைதான் செலவுசெய்ய முடியும்.
4. எப்போதும் ஒரு உச்ச தொகையளவு பேணப்படும்.

26) பின்வருவனவற்றுள் பொதுக் குறிப்பேட்டில் பதியப்படும் கொடுக்கல் வாங்கல்களில் ஒன்று.
1. காசுக்கு விற்பனை 40,000 ரூபா.
2. தேறிய இலாபம் 5,000 ரூபா மூலதனக் கணக்கிற்கு மாற்றியது.
3. அமலனுக்கு விற்பனை 40,000 ரூபா.
4. கடனுக்குக் கொள்வனவு 9,000 ரூபா.

27. உயர்தொழில் முயற்சி இலங்கையில் பொதுவாகப் பின்வரும் எந்த வகை அமைப்பினூடாக மேற்கொள்ளப்படும்.
1. தனி வியாபாரி. 2. தனிக்கம்பனி.
3. பங்குடமை. 4. பொதுக்கம்பனி.

28. கடன்படுநர் ஒருவருக்கு 10 % கழிவு கொடுத்தபின், அவரிடமிருந்து கிடைத்த காசு 6,300 ரூபா. கடன்படுநருக்குக் கொடுத்த கழிவு எவ்வளது?
1. 630 ரூபா. 2. 700 ரூபா. 3. 1000 ரூபா. 4. 370 ரூபா.

29) காசோலை வரைந்து வழங்குவதற்கு ஏதுவான கணக்கு.
1. சேமிப்புக் கணக்கு. 2. கேள்விக் கணக்கு.
3. நிலையான வைப்புக்கணக்கு. 4. மேற்கூறியவை யாவும்.

30) போக்குவரத்துமுறை ஒன்றில் அடிப்படைக் கூறுகள் தொடர்பான பொருத்தமற்றது.
1. பாதை. 2. ஊடகம். 3. வசதி. 4. நிலையம்.

31. பின்வருவனவற்றுள் காப்புறுதிக் கோட்பாடொன்றாக அமையாதது.
1. மிக்குயர் நம்பிக்கை. 2. காப்புறுதி செய்யும் உரிமை.
3. நட்டஈட்டு உத்தரவாதம். 4. காப்புறுதியின் பெறுமானம்.

32. நவீன பல்வழித் தொடர்பாடல் ஊடகமாகக் குறிப்பிடக்கூடியது.
1. ரூபவாஹினி உலக ஒளிபரப்பு.
2. தூரதர்ஷன் ஒளிபரப்பு.
3. வலைப்பின்னல் (Inter Net) அமைப்பு.
4. ரூபவாஹினி டிஸ்கவரி அலைவரிசை.

33. நுகர்வோர் உரிமைகளில் ஒன்று அல்லாதது.
1. வியாபாரியை எச்சரிக்கும் உரிமை.
2. தெரிவு செய்யும் உரிமை.
3. கவன ஈர்ப்பு உரிமை.
4. தகவல்களை அறிந்து கொள்ளும் உரிமை.

34. இலங்கையில் தரநிர்ணய சான்று வழங்கும் நிறுவனம்.
1. கைத்தொழில், விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகம்.
2. இலங்கைக் கட்டளை நிறுவனம்.
3. கைத்தொழில் அபிவிருத்திச் சபை.
4. முதலீட்டுச் சபை.

35. முறைசார் (அமைக்கப்பட்ட) முதலீட்டு வழிகள் அல்லாதது.
1. வங்கிவைப்பு. 2. திறைசேரிமுறி.
3. சீட்டு. 4. திறைசேரி உண்டியல்.

36. பங்குகள் தொடர்பான சுட்டிகளை (INDEX) வழங்கும் பணியை மேற்கொள்வது.
1. திறைசேரி. 2. மத்தியவங்கி.
3. மூலதனச்சந்தை. 4. பங்குப் பரிமாற்றகம்.

37. வியாபார வங்கிச் சேவையல்லாதது.
1. வைப்புக்களை ஏற்றல். 2. குத்தகைச் சேவை.
3. ஆலோசனைச்சேவை. 4. ஒப்புறுதிச் சேவை.

38. வங்கி இணக்கக்கூற்றில் இடம்பெறும் காரணி அல்லாதது.
1. தேறாத காசோலை.
2. வைப்பிட்டு மறுத்த காசோலை.
3. மாற்றப்படாத காசோலை.
4. வங்கிக்கூற்றில் தவறுதலாகச் செலவில் காணப்பட்ட பிரிதொருவருக்குரிய தொகை.

39. கிரயத்தின் பிரதான கூறுகளாய் அமைவது.
1. நேர் பொருட் கிரயம், நேர் கூலிக் கிரயம், நேர் செலவுக் கிரயம்.
2. நேர் பொருட் கிரயம், நேர் கூலிக் கிரயம், நேரிற் கிரயம்.
3. நேர் பொருட் கிரயம், நேர் செலவுக் கிரயம், நேரிற் பொருட் கிரயம், நேரிற் செலவுக் கிரயம்.
4. நேர் பொருட் கிரயம், நேர் கூலிக் கிரயம், நேர் செலவுக் கிரயம், நேரிற் கிரயம்.

40. ஆரம்ப மூலப்பொருள் இருப்பு 10,000 ரூபா, மூலப் பொருட் கொள்வனவு 50 ஆயிரம் ரூபா, மின்சாரம் 6,000 ரூபா, உட்சுமைக் கூலி 4,000 ரூபா, நேர்ச் செலவு 10,000 ரூபா, இறுதி மூலப்பொருள் இருப்பு 14,000 ரூபா.
மூலக் கிரயம் எவ்வளவு?
1. 60,000 ரூபா. 2. 50,000 ரூபா.
3. 66,000 ரூபா. 4. 54,000 ரூபா.

**தொகுப்பு: V.பிரகலாதன்**

இங்கே மடிக்கவும்

# தரம் 5 புலமை...

மாணவ...

முன்னாயத்த...

☞ இப்பகுதியை வாசித்து இல. 1...
வினாக்குரிய விடைகளை புள்...

மரக்கிளையின் மேலிருந்த மாம்ப...
போகும் ஒரு மொட்டைப் போ...
இடையிடையே தன் தலையை ...
பார்த்த குருவி, ஆபத்து என எ...
வில்லை. எனினும், துரதிஷ்டம...
ஒரு பக்கம் இருந்தது. அது சி...
பார்த்திருந்தால், தன்னை இ...
மிக அருகில் குறி பார்த்திருக்கும்...
ருக்கும். பழைய தேய்ந்த சைக்கி...
நிறமான சாரைப்பாம்பு - சிறிய...
மாம்பழக்குருவியை அவ்வேளை...
குருவி கீச், கீச் எனப் புலம்பிய...

1) இப்பந்தியில் குறிப்பிடப்பட்ட ஒரு ...
இங்கு குறிப்பிடப்பட்ட இன்னொரு ...

2) சாரைப்பாம்பு எங்கே இருந்தது...

3) சாரைப்பாம்பு என்ன செய்தது ...
நடையில் எழுதுக?
(..............................

☞ கீழே தரப்பட்டுள்ள சொற்களில் ப...

4) கிளை ..............................
5) பிராணி ..............................
6) மேலே ..............................
7) கறுப்பு ..............................

☞ கிழே தரப்பட்டுள்ள சொற்களின் ...
எழுதுக?

8) மொட்டு ..............................
9) நிறம் ..............................

☞ மேலே தரப்பட்டுள்ள பந்தியில் அ...
எழுதுக?

10) ..............................
11) ..............................

☞ மேலே தரப்பட்டுள்ள பந்தியில் ...
எழுதுக?

12) ..............................
13) ..............................

☞ கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு ...
ஆங்கிலச் சொல்லை (ஆங்கில எழு...

30) பச்சை நிறத்தையும், சிவப்பு நிறத்தையும் கலந்து கபில நிறத்தைப் பெறலாம். (...........)

31) ஒரு சாதாரண கடிதத்தை அஞ்சலில் போடுவதற்குத் தற்போது ரூ.3.50 சத முத்திரை ஒட்டுதல் வேண்டும். (...........)

32) தேயிலை ஒரு நாட்டுக்கே உரிய பயிராகும். (...........)

33) வாய் பேசாது, உபகரணங்களைப் பயன்படுத்தாது, நடத்தைகள்மூலம் நடித்தல் - சைகை நடிப்பு எனப்படும். (...........)

☞ சரியான விடையின் கீழ் கோடிடுக?

34) நீருடன் நன்கு கலக்கக்கூடிய திரவம் யாது?
1. மண்ணெண்ணெய் 2. வினாகிரி
3. பெற்றோல் 4. தேங்காயெண்ணெய்

35) குழந்தைப்பருவத்தில் பால் குடித்து வளரும் பறவை எது?
1. தீக்கோழி 2. ஆந்தை
3. வெளவால் 4. ஆட்காட்டிக்குருவி

36) நெத்தலியை உண்பதனால் உடலுக்குக் கிடைக்கும் போசணைப் பொருள் யாது?
1. புரதம் 2. கொழுப்பு
3. விற்றமின் A 4. கல்சியம்

37) ஒரு காந்தத் துண்டின் முனையை, இன்னொரு காந்தத் துண்டின் முனைக்கு அருகில் பிடித்தபோது, முன்னைய காந்தத் துண்டு விலகிச்சென்றது. இதனைக் குறிக்கும் சொல்.
1. கவர்தல் 2. கடத்துதல்
3. விரிவடைதல் 4. தள்ளுதல்

38) ஆரம்பத் தையல் முறையின் கீழே வரும் ஒரு தையல் முறை?
1. சோம் தையல் 2. வெட்டுக் குத்துத் தையல்
3. நரம்புத் தையல் 4. மீன்முள்ளுத் தையல்

☞ உணவு அசுத்தமடையும் படிமுறை தொடர்பான கூற்றுகள் சில கீழே தரப்பட்டுள்ளன. அந்தப் படிமுறையின் சரியான ஒழுங்கினைக் கவனித்து, அதற்கு ஏற்ப ஒவ்வொரு கூற்றின் எதிரிலும் உள்ள கூட்டில், 2 இலிருந்து 6 வரை இலக்கங்களை எழுதுக. (உங்களுக்காக இல 1. குறிக்கப்பட்டுள்ளது)

39) ஈக்கள் உணவில் அமருகின்றன. [ ]

40) அசுத்தமான உணவை உண்பதனால் கிருமிகள் உணவில் சேருகின்றன. [ ]

41) குப்பை கூழங்களினால் ஈக்கள் பெருகுகின்றன. [ ]

42) சிலர் வீடுகளின் அருகில் குப்பை கூழங்களை குவித்து வைக்கின்றனர். [ 1 ]

43) உடலினுள் கிருமிகள் செல்வதால், வயிற்றுவலி ஏற்படுகினறது. [ ]

44) ஈக்களின் காலில் இருக்கும் அசுத்தங்கள் உணவில் சேருகின்றன. [ ]

☞ கீழே தரப்பட்டுள்ள சொற்களில் பொருத்தமானதை மட்டும் தெரிந்து, 45 முதல் 49 வரையிலான வினாக்களின் இடைவெளிகளை நிரப்புக.

**பாரந்தூக்கி, துருக்கி, மட்டப்பலகை, தூக்குக் குண்டு, சீவுளி, கலப்பை, வாள், துரப்பணம்.**

45) நெருப்பு எரியக் காற்றை வழங்கும் உபகரணம்.
...............................................

46) மரப்பலகையை அழுத்தமாக்கப் பயன்படும் உபகரணம்.
...............................................

47) பாரங்களை மேலே உயர்த்தப் பயன்படும் கருவி.
...............................................

48) வயலில் சேற்றை மட்டமாக்கப் பயன்படும் உபகரணம்.
...............................................

49) ஒரு சுவரை நிலைக்குத்தாகக் கட்டியெழுப்பப் பயன்படும் உபகரணம்.
...............................................

☞ ஒரு வியாபாரி 5 நாள்களில் விற்ற பாலின் அளவு தொடர்பான வரைபு கீழே தரப்பட்டுள்ளது. இந்த வரைபின் உதவியுடன், 50 முதல் 53 வரையிலான வினாக்களுக்கு விடை தருக.




50) திங்கட்கிழமை விற்ற பாலின் அளவு எவ்வளவு? (....... லீற்றர்)

51) ஞாயிறு, திங்கள் ஆகிய இரு நாள்களிலும் விற்ற பாலின் மொத்த அளவு எவ்வளவு? (....... லீற்றர்)

52) புதன்கிழமையைவிட ஞாயிற்றுக்கிழமை எவ்வளவு பால் கூடுதலாக விற்கப்பட்டுள்ளது? (....... லீற்றர்)

53) ஒரு லீற்றர் பால் ரூ.32 எனில், செவ்வாய்க்கிழமை விற்ற பாலினால் பெற்ற வருமானம் யாது? (....... லீற்றர்)

54) பால் நிரப்பப்பட்ட பாத்திரங்கள் 2 லீற்றர் கொள்ளக்கூடியவை எனின், வியாழக்கிழமை விற்ற பால் பாத்திரங்களின் தொகை எவ்வளவு? (.............)

55) ஞாயிற்றுக்கிழமை விற்கப்பட்ட பாலின் அளவு - வேறு இரண்டு நாட்களில் விற்கப்பட்ட பாலின் அளவை விட, மிகவும் அதிகமாகும். அந்த இரு நாட்களின் பெயரையும் எழுதுக? (.............................)

☞ "உயர்ந்த மலை உச்சி மீது ஏறியிருக்கும் நான் ...." என்னும் தலைப்பில் கீழ் 5 வாக்கியங்கள் தருக.
(ஒரு வசனத்தில் குறைந்தது 4 சொற்களேனும் இருக்கவேண்டும்)
1. ...............................................
2. ...............................................
3. ...............................................
4. ...............................................
5. ...............................................

(தொடரும்...)

இங்கே மடிக்கவும்

# க.பொ.த. ம

## வணிகக் கல்வியும் கணக்

01. வியாபாரம் என்பது.
1. இலாபத்தை உழைத்தல்.
2. பொருட்களை விற்றல்.
3. பொருட்களை வாங்குதல்.
4. பணப்பெறுமதி அடிப்படையில் பொருட்க உரிமையை மாற்றல்.

02. வணிகம் என்பதன் இறுதித் தொழிற்பாடு
1. நுகர்வு. 2. விற்பனை.
3. பங்கீடு. 4. வியாபாரம்.

03. வணிகச் சூழலானது அகச்சூழல், புறச்சு வகைகளாகப் பிரிக்கப்படும். புறச்சூழலுக் கருதப்பட முடியாதகாரணி பின்வருவனவ
1. தொழினுட்பம். 2. சமூகமும்
3. சனத்தொகை. 4. மூலதனம்.

04. பின்வருவனவற்றுள் கடையில் பண்டம் அ
1. சட்டை. 2. தொலைக்
3. சிகரெட். 4. தளபாடத்

05. திறந்த சந்தையின் அனுகூலங்களில் ஒ
1. நுகர்வோர் தெரிவுரிமை காணப்படல்.
2. பேரளவு உற்பத்தியின் நன்மை கிடை
3. புதிய கண்டுபிடிப்புக்கள், புதுமை படை
4. உலகின் சகல பகுதிகளுக்கும் அபி விழுதல்.

06. உள்நாட்டு உற்பத்தி அதிகரிப்பின், ஒரு ப
1. அதிகரிக்கும். 2. குறையும்.
3. மாறாது. 4. மேற்கூறிய

07. நுகர்வோரின் சேமிப்பு நாட்டம் அதிகரிப்பின், ஒ
1. கேள்வி குறையும். 2. கேள்வி அ
3. நிரம்பல் அதிகரிக்கும். 4. நிரம்பல் கு

08. அரசாங்கமானது வணிகத்தைக் கட்டுப்ப
1. ஒழுங்குபடுத்துபவராக. 2. வழங்குன
3. வாடிக்கையாளராக. 4. மேற்கூறி

09. வணிகத்தின் ஒரு சமூகப்பொறுப்பு யாது
1. பங்குதாரர்களுக்கு நன்மைகளை அ
2. சூழலைப் பாதுகாத்தல்.
3. ஊழியர்களுக்கு நியாயமான சம்பளத்தை
4. வணிகத்தை விரிவுபடுத்தல்.

❖ பின்வரும் கொடுக்கல் வாங்கல்களை கொண்டு, 10 ஆம் 11 ஆம் 12 ஆம் வினா தருக.
A. பணத்தின் ரூபா 200,000 என்னும் தொ முதலீடு செய்யப்பட்டுள்ளது.
B. இயந்திரம் ஒன்று ரூபா 100,000 என்னும் கொள்வனவு செய்யப்பட்டது.

# க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை
# மாதிரி வினாத்தாள்

## வணிகக் கல்வியும் கணக்கீடும் - 1

01. வியாபாரம் என்பது.
   1. இலாபத்தை உழைத்தல்.
   2. பொருட்களை விற்றல்.
   3. பொருட்களை வாங்குதல்.
   4. பணப்பெறுமதி அடிப்படையில் பொருட்கள், சேவைகளின் உரிமையை மாற்றல்.

02. வணிகம் என்பதன் இறுதித் தொழிற்பாடு.
   1. நுகர்வு. 2. விற்பனை.
   3. பங்கீடு. 4. வியாபாரம்.

03. வணிகச் சூழலானது அகச்சூழல், புறச்சூழல், என இரு வகைகளாகப் பிரிக்கப்படும். புறச்சூழலுக்கு உரியதாகக் கருதப்பட முடியாதகாரணி பின்வருவனவற்றில் எது?
   1. தொழினுட்பம். 2. சமூகமும் பண்பாடும்.
   3. சனத்தொகை. 4. மூலதனம்.

04. பின்வருவனவற்றுள் கடையில் பண்டம் அல்லாதது.
   1. சட்டை. 2. தொலைக்காட்சிப் பெட்டி.
   3. சிகரெட். 4. தளபாடத் தொகுதி.

05. திறந்த சந்தையின் அனுகூலங்களில் ஒன்று அல்லாதது.
   1. நுகர்வோர் தெரிவுரிமை காணப்படல்.
   2. பேரளவு உற்பத்தியின் நன்மை கிடையாது.
   3. புதிய கண்டுபிடிப்புக்கள், புதுமை படைப்புக்கள் ஏற்படல்.
   4. உலகின் சகல பகுதிகளுக்கும் அபிவிருத்திப் பார்வை விழுதல்.

06. உள்நாட்டு உற்பத்தி அதிகரிப்பின், ஒரு பண்டத்தின் கேள்வி
   1. அதிகரிக்கும். 2. குறையும்.
   3. மாறாது. 4. மேற்கூறிய யாவும் சரி.

07. நுகர்வோரின் சேமிப்பு நாட்டம் அதிகரிப்பின், ஒரு பண்டத்திற்கான
   1. கேள்வி குறையும். 2. கேள்வி அதிகரிக்கும்.
   3. நிரம்பல் அதிகரிக்கும். 4. நிரம்பல் குறையும்.

08. அரசாங்கமானது வணிகத்தைக் கட்டுப்படுத்தும் வழிகள்.
   1. ஒழுங்குபடுத்துபவராக. 2. வழங்குனராக.
   3. வாடிக்கையாளராக. 4. மேற்கூறிய யாவும்.

09. வணிகத்தின் ஒரு சமூகப்பொறுப்பு யாது?
   1. பங்குதாரர்களுக்கு நன்மைகளை அளித்தல்.
   2. சூழலைப் பாதுகாத்தல்.
   3. ஊழியர்களுக்கு நியாயமான சம்பளத்தைச் செலுத்துதல்.
   4. வணிகத்தை விரிவுபடுத்தல்.

❖ பின்வரும் கொடுக்கல் வாங்கல்களை அடிப்படையாகக் கொண்டு, 10 ஆம் 11 ஆம் 12 ஆம் வினாக்களுக்கு விடை தருக.

A. பணத்தின் ரூபா 200,000 என்னும் தொகை மூலதனமாக முதலீடு செய்யப்பட்டுள்ளது.
B. இயந்திரம் ஒன்று ரூபா 100,000 என்னும் தொகைக்குக் கொள்வனவு செய்யப்பட்டது.
C. வியாபாரத்தின் வாடகைக் கட்டணமாகச் செலுத்தப்பட்ட தொகை ரூபா 8,000.
D. வாடிக்கையாளனான கமலிடம் ரூபா 35,000 இற்குப் பண்டங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.
E. பெற்றுக்கொள்ளப்பட்ட வங்கிக் கடன் ரூபா 40,000.

10. சொத்தின் மீது நேரடியாக மட்டும் செலுத்திய கொடுக்கல் வாங்கல் எது?
   1. A 2. B 3. C 4. D

11. வணிகத்தின் மூலதனம், சொத்துக்கள் என்பவற்றின் மீது தாக்கம் செலுத்திய கொடுக்கல் வாங்கல் எது?
   1. A 2. B 3. C 4. E

12. இலாபத்தின் மீது நேரடியாக தாக்கம் செலுத்திய கொடுக்கல் வாங்கல் எது?
   1. A 2. B 3. C 4. D

13. பின்வரும் நிகழ்வுகளுள் கணக்குகளில் பதியப்படுவது எது?
   1. கடனுக்கு பொருட்களை விற்பனை செய்வது எனத் தீர்மானித்தல்.
   2. வணிகக் கட்டடவளவிற்கான வாடகை கொடுப்பனவு.
   3. பொறித்தொகுதியை நிறுவுதற்குரிய இடத்தைத் தெரிவு செய்தல்.
   4. முகாமையாளரின் முகாமைத் திறனை மதிப்பிடல்.

14. இறுதி நுகர்வோருக்குப் பண்டங்களை அல்லது சேவைகளை விற்கும் நபர்?
   1. உற்பத்தியாளன். 2. மொத்த வியாபாரி.
   3. முகவர். 4. சில்லறை வியாபாரி.

15. ஒரு சில்லறை வியாபாரக் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான, மிகப்பிரதானமான ஆளை அல்லது அமைப்பைத் தேர்ந்தெடுக்குக.
   1. தனி வியாபாரி.
   2. நுகர்வோர்.
   3. போக்குவரத்து முகவர்.
   4. கூட்டுறவுச் சில்லறைக்கடை.

16. இலங்கை தேயிலையைப் பெருமளவில் கொள்வனவு செய்யும் நாடு.
   1. பாகிஸ்தான் 2. பிரான்ஸ்
   3. ஈராக் 4. ஜப்பான்

17. கொள்வனவு திரும்பல்களைப் பதிவுசெய்வதற்குப் பயன்படுத்தப்படும் மூல ஆணவம்.
   1. பற்றுச்சீட்டு. 2. செலவுத்தாள்.
   3. கிரயப்பட்டியல். 4. வரவுத்தாள்.

18. இறக்கமதி செய்யப்பட்ட பொருளை உரிமை கோருவதற்குப் பயன்படுத்தப்படும் பிரதானமான ஆவணம்.
   1. கட்டளையட்டவணை.
   2. இறக்குமதி அனுமதிப்பத்திரம்.
   3. வார்நாமம் (சுமைச்சீட்டு).
   4. மூலச்சான்றிதழ்.

இங்கே மடிக்கவும்

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*வேட்பன சொல்லி வினைஇல எஞ்ஞான்றும்*
*கேட்பினும் சொல்லா விடல்*

திருக்குறள்

# நமது நோக்கு

## புதைக்கப்பட்ட உண்மை

மாமனிதர் குமார் பொன்னம்பலம் படுகொலை தொடர்பான வழக்கின் பிரதான சந்தேக நபராக இருந்த சுனில் ரட்ணவீர என்ற பாதாள உலகைச் சேர்ந்தவர் எம்பிலிப்பிட்டியவில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

எம்பிலிப்பிட்டிய நீதிமன்றிலிருந்து தங்காலைச் சிறைச்சாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டபோதே, சுனில் ரட்ணவீர சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறார்.

பாதாள உலகைச் சேர்ந்தவர்கள் மீது அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்துவருகின்ற அதேவேளை, இத்தகைய சம்பவம் ஒன்று இடம்பெற்றிருக்கிறது. அதுவும், கொல்லப்பட்டவர் மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் படுகொலையுடன் சம்பந்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்பட்ட பிரதானமான நபராவார்.

மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் மரணம், 2000 ஆம் அண்டு ஜனவரி மாதம் இடம்பெற்ற போதும், அப்போது ஆட்சியில் இருந்த பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம், இந்தப் படுகொலை தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஆட்சியில் இருந்த அப்போதைய அரசுக்கு, சவால் மிகுந்த ஒரு நபராகவே குமார் பொன்னம்பலம் இருந்து வந்தார். அத்துடன் புலிகளுக்குச் சார்பாகக் கொழும்பிலிருந்து குரல் கொடுத்துவந்த ஒருவராகவும் குமார் பொன்னம்பலம் விளங்கினார்.

இதனாலோ என்னவோ குமார் பொன்னம்பலத்தின் படுகொலை தொடர்பான விசாரணைகள் குறித்து, அப்போதைய அரசாங்கம் எந்த நடவடிக்கைகளையும் எடுக்காமல் இருந்து வந்தது.

ஆனால், இன்னொரு பக்கத்தில் இந்தக் கொலைக்கும் அப்போதைய அரசாங்கத்தின், முக்கிய அமைச்சர் ஒருவருக்கும், நெருங்கிய தொடர்புகள் இருந்ததாகக் குற்றச்சாட்டுகள் எழுந்தன.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் பதவிக்கு வந்து பின்னரும் கூட, குமார் பொன்னம்பலம் படுகொலையுடன சம்பந்தப்பட்டோர் மீது பெரும் எடுப்பிலான விசாரணைகள் நடத்தப்பட்டதென்றோ, சந்தேக நபர்கள், பிரதான சூத்திரதாரிகள் கண்டுபிடிக்கப்பட்டு, நீதிமன்றில் நிறுத்தப்பட்டனர் என்றோ கூறமுடியாது.

குமார் பொன்னம்பலத்தின் படுகொலையுடன் நேரடியாகச் சம்பந்தப்பட்டார் என்று கருதப்பட்டவர் மொறட்டுவ சமன் என்ற பாதாள உலகத் தலைவர். இவர் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

குமார் கொலை தொடர்பான இரகசியங்களையும், இந்தக் கொலைக்கு உத்தரவிட்ட முக்கிய புள்ளி ஒருவர் தொடர்பான விவரங்களையும், குமாரின் வழக்கில் ஆஜராகும் சட்டத்தரணி தயா பெரேராவிடம் வழங்க முன்வந்த வேளையிலேயே - மர்மமான முறையில் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார்.

இந்தக் கொலையுடன், குமார் பொன்னம்பலத்தின் படுகொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் தொடர்பான முக்கிய ஆதாரங்கள் மறைக்கப்பட்டன என்றே சொல்ல வேண்டும்.

இப்போது, குமார் பொன்னம்பலத்தின் கொலை தொடர்பான முக்கியமான இன்னொரு சந்தேக நபரான சுனில் ரட்ணவீர என்பவர், பொலிஸாரின் பாதுகாப்பில் கொண்டுசெல்லப்பட்டபோது சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறார்.

இதன்மூலம்-குமார் பொன்னம்பலத்தின் படுகொலையுடன் சம்பந்தப்பட்ட, அதாவது இது தொடர்பான தகவல்களை அளித்த கடைசி நபரும் சாகடிக்கப்பட்டுவிட்டார்.

இந்த மரணத்தின் மூலமாக குமார் பொன்னம்பலத்தின் கொலை தொடர்பான விசாரணைகளும் பெரிதும் பாதிக்கப்படும் என்று உள்துறை அமைச்சர் கூடத் தெரிவித்திருக்கின்றார்.

சுனில் ரட்ணவீரவின் கொலையுடன், குமார் பொன்னம்பலத்தின் கொலை தொடர்பான விசாரணைகள் முடக்கமடையும் நிலை தோன்றியிருப்பது -

குமார் பொன்னம்பலத்தின் படுகொலைக்கு உத்தரவிட்ட அரசியல் புள்ளிகள் பற்றிய விவரங்கள் வெளிவராமலேயே போய்விடக்கூடிய அபாய நிலையைத் தோற்றுவித்திருக்கிறது.

அரசாங்கம் இந்த விடயத்தில் துரித நடவடிக்கையை எடுத்து விசாரணைகளை நடத்த தவறிவிட்டு, இப்போது கொலைக்கான தடயங்கள் அழிந்துவிட்டன எனக் கவலை தெரிவித்துவருகிறது. இது எந்தவகையிலும் ஏற்புடையதல்ல.

முக்கிய பிரமுகர் ஒருவரின் கொலைக்கு - அரசியல் பிரமுகர் ஒருவர் உத்தரவிட்ட விவகாரம், மக்கள் முன் கொண்டுவரப்படாமலேயே மறக்கப்பட்டுவிட்டதென்றால் அது நீதித்துறைக்கு ஒரு அவமானமேயாகும்.



பொங்குதமிழ் ஏற்பாட்டுக்குழுவினரால் அழைப்பு விடுக்கப்பட்ட ஹர்த்தால் நேற்றுமுன்தினம் அனுஷ்டிக்கப்பட்டபோது, திருமலை நகர் வெறிச்சோடிக் கிடப்பதைப் படங்களில் காணலாம்.

# முறையான திட்டம், அடிப்படையின்றி சமாதானத்தை நிலைநாட்ட முடியாது!

## பின்லாந்து முன்னாள் ஜனாதிபதியுடனான சந்திப்பில் சந்திரிகா

(கொழும்பு)

தமது தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட சமாதானத் திட்டத்தை தற்போதைய அரசாங்கமும் முன்னெடுத்துச் செல்வது குறித்து ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

எனினும் முறையான திட்டமின்றி செயல்படுவதால் தீர்க்கமான ஒரு முடிவைக் காண்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாக ஜனாதிபதி குறிப்பிட்டார். முறையான திட்டமும் பேச்சுவார்த்தைக்கான அடிப்படையும் இல்லாவிட்டால் சமாதானத்தை நிலைநாட்ட முடியாது. பேச்சுவார்த்தைகள் நேர்மையாகவும், பரவலாகவும் அனைத்துத் தரப்பினரும் பங்கெடுத்துக் கொள்ளக்கூடிய வகையில் பகிரங்கமானதாக இருக்கவேண்டும்.

ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் இலங்கை வந்துள்ள பின்லாந்து முன்னாள் ஜனாதிபதி தலைமையிலான பிரதிநிதிகள் குழு நேற்று முன்தினம் ஜனாதிபதி மாளிகையில் சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்தபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் பல நடவடிக்கைகள் அரசாங்கத்தின் இறைமைக்கு முரணானதாக உள்ளது என்று ஜனாதிபதி தெரிவித்ததாக, ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலில்- ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தாவும், கலந்துகொண்டதாகவும், விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் சமாதானத் திட்டத்தைப் பாதிப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியதாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புதிய அமெரிக்கத் தூதுவர் சனியன்று கொழும்பு வருகிறார்!

இலங்கைக்கான புதிய அமெரிக்கத் தூதுவர் ஜெவ்ரி லன்ஸ்ரீட் எதிர்வரும் சனிக்கிழமை தனது கடமையைப் பொறுப்பேற்றுக்கொள்வதற்காக கொழும்பு வரவுள்ளார்.

அமெரிக்க வெளிவிவகார சேவையில் 1977 ஆம் ஆண்டுமுதல் பணியாற்றி வரும் ஜெவ்ரி லன்ஸ்ரீட் பாகிஸ்தான், பங்களாதேஷ், இந்தியா, மலேசியா ஆகிய நாடுகளில் பணியாற்றியவர்

அமெரிக்க வெளிவிவகாரத் திணைக்களத்தால் பல் வேறு பதவிப் பொறுப்புக்களையும் வகித்த இவர், இலங்கை மற்றும் மாலைதீவுக்கான தூதுவராக நியமிக்க கடந்த மேமாதம் அமெரிக்க செனெட் சபை அங்கீகாரம் வழங்கியிருந்தது.

# மன்னாரில் 19 கிராமங்களில் 664 குடும்பங்கள் மீளக்குடியேற்றம்!

(மன்னார்)

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னர், மன்னாரில் பத்தொன்பது கிராமங்களில் கண்ணிவெடிகள், மிதிவெடிகள் அகற்றப்பட்டு அறுநூற்று அறுபத்துநான்கு குடும்பங்கள் மீளக் குடியேறியுள்ளன.

மனிதநேய கண்ணிவெடியகற்றும் பிரிவினருடன் எவ்.எஸ்.டி என்ற சர்வதேச அமைப்பு இணைந்து இந்த கண்ணிவெடிகளை அகற்றியுள்ளன.

இதில் 1143 மிதிவெடிகள், 325 கண்ணிவெடிகள் - பெரியமடு, தட்சணாமருதமடு, ஈச்சிலவத்தை, அடம்பன் ஆகிய பகுதிகளில் 37216 சதுரமைல் பரப்பில் மீட்கப்பட்டுள்ளன.

இவ்வாறு மீட்கப்பட்ட வெடிபொருட்கள் அடுத்தமாத முதல்வாரத்தில் மன்னார் நாயாற்றுவெளியில் அழிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (201)

## கண்ணிவெடிகளால் பாதிப்புற்றோருக்கு

# புனர்வாழ்வு வழங்குவது குறித்த அறிக்கையை சமர்ப்பிக்குமாறு யு.என்.டி.பியிடம் கோரிக்கை!

## பிரதமரின் செயலாளர் விடுத்தார்

(கொழும்பு)

நிலக்கண்ணிவெடிகள், மிதிவெடிகளால் பாதிக்கப்பட்டோருக்கு உடனடி நிவாரணம் வழங்கல், புனர்வாழ்வு அளித்தல், சுயதொழில் முயற்சிகளை ஊக்குவித்தல் போன்ற செயற்பாடுகள் அடங்கிய முழுமையான திட்டவரைபொன்றைச் சமர்ப்பிக்குமாறு பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நிலக்கண்ணிவெடிகள், மிதிவெடிகளை அகற்றும் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல், இந்த நடவடிக்கைக்கு உதவி வழங்கல், கண்ணிவெடிகளால் பாதிக்கபபட்டு கை,கால்களை இழந்து பாதிக்கப்பட்டவர்களுக்குப் புனர்வாழ்வளித்தல், சுயதொழில் முயற்சிகளுக்கு கைகொடுத்தல், தொழிற்பயிற்சி வழங்குதல் போன்ற விடயங்கள் குறித்து யு.என்.டி.பி. திட்டவரைபு ஒன்றைச் சமர்ப்பித்துள்ளது.

இந்தத் திட்டவரைபில் - பாதிக்கப்பட்டோருக்கு உதவி வழங்குவது தொடர்பாக தெளிவாகக் குறிப்பிடப்பாததால், இதுகுறித்து அறிக்கை ஒன்றைத் தருமாறு பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் யு.என்.டி.பியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அடுத்த இரண்டு வாரங்களுக்குள் இதுகுறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்படவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# எரிபொருட்களின் விலை அடுத்தமாதம் உயரும்!

எரிபொருட்களின் விலைகள் அடுத்தமாதம் முதல் அதிகரிக்கப்படவிருப்பதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் தகம் விமலசேன தெரிவித்தார்.

சர்வதேச சந்தையில் எரிபொருட்களின் விலை அதிகரித்துள்ளதால் இலங்கையிலும் எரிபொருட்களின் விலைகளை மீளாய்வு செய்யவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஈராக்கில் போர் ஏற்பட்டதால் ஏற்பட்ட எரிபொருள் விலை உயர்வினால், கூட்டுத்தாபனத்துக்கு 1.6 மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரதிநிதி வவுனியா திட்டங்களை மேற்பார்வை!

(கொழும்பு)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பிரதிநிதி தலைமையிலான உயர்மட்டக் குழுவினர் நேற்று முன்தினம் வவுனியாவுக்கு நேரில் சென்று, அங்குமேற்கொண்டுவரும் அபிவிருத்தித் திட்டங்களைப் பார்வையிட்டனர்.

நேற்றுமுன்தினம் காலை ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான திட்டப்பிரதிநிதி யோன் கூனி தலைமையிலான 14 அதிதிகள் வவுனியாவுக்குச் சென்றிருந்தனர்.

வவுனியா அரச அதிபர் கணேஷைச் சந்தித்து வவுனியா மாவட்டத்தில் ஆசிய அபிவிருத்திச் சங்கத்தினால் மேற் கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்றம், வேலைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்பட்டுள்ள இடர்கள் என்பன குறித்து கலந்துரையாடப்பட்டது.

இந்த உயர்மட்டக் குழுவினர் ஏ-9 வீதியூடாக நேற்று முன்தினம் கிளிநொச்சிக்கும் சென்று - அங்கு மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்களையும் பார்வையிட்டனர்.

# அத்துமீறி நுழையும் இந்திய மீன்பிடி ட்ரோலர்கள்; எதிர்காலத்தில் மீன்வளம் அற்றுப்போகும் ஆபத்து!

## வடமாகாண கடற்தொழிலாளர் சங்கத் தலைவர் தவரட்ணம்

(யாழ்ப்பாணம்)

அத்துமீறி நுழையும் இந்திய ட்ரோலர்களினால், எதிர்காலத்தில் மீன்வளம் அற்றுப் போகும் அபாயம் தோன்றத்கூடிய சூழ்நிலை உருவாகி வருவதாக, வடமாகாணக் கடற் தொழிலாளர் சமாசத்தின் தலைவர் தவரட்ணம் தெரிவித்தார்.

அண்மையில் இலங்கையின் கடற்பகுதிக்குள் - இந்திய மீனவர்களின் மீன்பிடிப்படகுகள் அத்துமீறி நுழைந்து, கடல் வளங்களை அள்ளிச் செல்வதை, வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறான செயற்பாடுகளைக் கண்டிக்கும் நோக்கில் - இலங்கை, குறிப்பாக வடபகுதி மீனவர்கள் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

அத்துமீறி நுழையும் ட்ரோலர்களை, மடக்கிப் பிடித்து, அதில் பயணம் செய்த மீனவர்களையும், படகுகளையும் கைப்பற்றி இருந்தனர். இவ்வாறான சம்பவங்கள் - நெடுந்தீவு, மாதகல், வடமராட்சி, சுழிபுரம், குருநாகல் ஆகிய பகுதிகளில் நடைபெற்றன.

மீனவர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்ட இந்திய மீனவர்களை விடுவிப்பதற்குப் பலதரப்பினரும், "அக்கறையோடு" செயற்பட்டு, அவர்களை விடுவித்தனர். இந்திய மீனவர்களை-இந்தியக் கரைவரை சென்று வழியனுப்பி வைத்திருந்தனர்.

இந்த நடவடிக்கைகளால், இந்திய மீனவர்கள் பாதிப்பு எதுவும் அடைந்ததாகத் தெரியவில்லை. தண்டனைக்கு உட்பட்டதாக அறிய முடியவில்லை.

ஆனால், யாழ்பாண மீனவர்கள் - தம்முடைய கடல் வளங்கள் சூறையாடப்படுவதைக் கண்டு, நாளாந்தம் கண்ணீர் வடிக்கும் நிலையே காணப்படுகின்றது.

இந்த நிலைமை தொடர்ந்தால், யாழ்ப் பாணப் பிரதேசத்துக் கடல்வளம் இல்லாது, வெறும் சிமெந்துத் தரைபோல - கடல் ஆகிவிடும்.



தடுத்து வைக்கப்பட்ட இந்திய மீன்பிடிப்படகுகள்

ட்ரோலர்கள் மீன்பிடிக்கும்போது, கடலில் எந்தவிதமான எச்சங்களையும் விட்டுவைக்காது, மீன் வளங்களை அள்ளிச்செல்வது வழமையாகும். ஆழ்கடல் பகுதிகளுக்கென-மீன்பிடித் தொழிலை மேற்கொள்ள உதவியாகவே, ட்ரோலர்கள் பயன்படுத்தப்படுகின்றமை வழமையாகும்.

இந்த வழமைக்கு மாறாகச் செயற்பாட்டால், விளைவுகள் மோசமாகும். இலங்கைக் கடல் - 9 பாகம் ஆழமுடைய கடற்பிரதேசத்தை உடையது. இதில், ட்ரோலர்களைப் பாவிப்பதால் ஏற்படும் பிரச்சினைகள் அளவிடமுடியாது.

மீன்கள் இடம்பெயர்ந்து, வேறு பிரதேசத்துக்குச் சென்று, இனங்களை உருவாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன. இந்தப் பிரதேசங்களில் ட்ரோலர் மீன்பிடிக்கும் பகுதிகளில் - மீன்பிடிக்க முடியாதநிலை, மீன்களின் இனப்பெருக்கம் நடைபெறமுடியாதநிலையே இதற்குக் காரணமாக இருக்கின்றது.

இலங்கை அரசாங்கம் - தமிழ் மக்களை அழிப்பதற்காக, யுத்தத்தை நடத்திக்கொண்டு வந்தது. அது தற்போது, யுத்தம் ஓய்ந்து, யுத்தநிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டபோது, தமிழர்களை எவ்வாறு ஒடுக்குவது என்று இலங்கை அரசு சிந்தித்தவண்ணம் உள்ளது.

இந்தநிலையில், இந்திய மீனவர்களின் அத்துமீறிய செயற்பாடுகள் - இலங்கை அரசை மகிழ்ச்சிப்படுத்தவே செய்கின்றன. அதற்கு ஒத்துழைப்பும் வழங்குவதுபோலத் தெரிகின்றது.

தமிழ் மக்களின் வளங்கள் சுரண்டப்படுவதைக் கண்டு, இலங்கை அரசு மகிழ்ச்சி கொள்கின்ற நிலைமையில் - இலங்கை அரசிடம் எவ்வாறு எடுத்துக் கூறுவது என்பதே, வடபகுதி மீனவர்களின் தற்போதைய பிரச்சினையாகவுள்ளது.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டி, கடற்தொழிலாளர் சங்கம் - சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் எவ்வளவோ முறைப்பாடுகளையும், மகஜர்களையும் கையளித்திருக்கின்றது. வெளிநாட்டுப் பிரஜைகள், முக்கிய பிரமுகர்கள் - வடபகுதிக்கு விஜயம் செய்யும்போது, மகஜர் கையளிப்பு என்பது ஒரு சம்பிரதாய நடவடிக்கையாக இடம்பெறுகின்றது.

மகஜரைப் பெற்றுக்கொண்டு, நடவடிக்கை எடுப்பதாகக்கூறிச் செல்பவர்கள் - அதற்குரிய நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை.

இந்நிலைமையில், உரிய நடவடிக்கை எடுக்கப்படுமானால், இந்திய ட்ரோலர்கள் - ஓடுவதற்கு எரிபொருள் பெற்றுக்கொள்ளக் கூடத் திண்டாடும் நிலைமை ஏற்படும். அதே வேளை, நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தால், வடபகுதி மீனவர்களின் வாழ்கைத்தரம் உயர்வதற்கு வசதி ஏற்படும். பொருளாதார வளர்ச்சியில் மீன்பிடித்தொழிலின் பங்கு உயர்வடைய வசதியேற்படும்.

இந்திய மீனவர்களின் அத்துமீறிய நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட வடபகுதி மீனவர்களுக்கு, உரிய நியாயம் பெற்றுக் கொடுப்பது - சம்பந்தப்பட்டவர்களின் முதன்மை விடயமாகத் தற்போது அமைகின்றது.

# அடிபணியாத இனமாக தமிழினம் இன்று உலகில் மாற்றம் பெறுகிறது!

## திலீபன் நினைவுத்தூபி திறப்பு விழாவில் இளம்பரிதி

அடிக்க அடிக்க அடிவாங்கிய ஒரு இனம், இன்று அடிபணியாத ஒரு இனமாகியுள்ளது. அழித்து, அழியும் என்று நினைத்த சிங்களவருக்கு, இது அழியாத ஒரு வீரத்தமிழினம் என்று நிரூபித்து நிற்கின்றது.

இவ்வாறு கூறினார் யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி.

நல்லூர் பின் வீதியில், நேற்று முன்தினம் நடைபெற்ற தியாகி திலீபன் நினைவுத்தூபி திரைநீக்கத்தின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இடித்து இடித்து இவர்களுடைய வாழ்வும், நினைவும், நினைவுத் தூண்களும் இடியுமென எதிரி நினைத்தான். ஆனால், இடித்தாலும் அது தொடர்ந்து உறுதியாக நிற்கும் என்பதை இந்நிகழ்வு எடுத்துக் காட்டுகின்றது.

மக்களுக்காக வாழ்ந்து, மக்களுக்காகப் போராடி, மக்களுக்காக மாவீரரான ஒரு வரலாற்றில், மாவீரருடைய நினைவுச் சின்னத்தையும் தோற்றுவித்தவன் தியாகி திலீபன்.

1988 ஆம் ஆண்டு இந்திய இராணுவம் சூழ்ந்து நின்றகாலம். அந்தக் காலத்தில் மக்களின் விடுதலை எழுச்சியை யாரும் தடுத்து நிறுத்த முடியவில்லை. மக்களின் எழுச்சிக்காக மாவீரனாகிய இந்த வீரனுடைய எழுச்சியையும் யாராலும் தடுக்கமுடியவில்லை.

நினைவுச் சின்னத்தை அப்போது இடித்தார்கள் எமது எதிரிகள். இன்று இடித்த அதே இடத்தில், இந்த மாவீரனுடைய நினைவுச் சின்ம் நிறுவப்பட்டுள்ளது.

இங்குதான் 'தமிழ் வரலாற்றில்-தமிழன் சிறப்பு அடைகின்றான். அந்தச் சிறப்புக்குக் காரணமாயிருந்து, அடித்தளம் இட்ட அனைவருக்கும் நான் பாராட்டுத் தெரிவிக்கின்றேன்.

இங்குதான் மக்கள் ஒவ்வொரு கட்டத்திலும், ஒவ்வொரு விதமான பங்களிப்பைச் செய்து நிற்கின்றார்கள். வரலாற்றுப் பங்களிப்பைத் தாமாகவே செய்திருக்கின்றார்கள்.

அரசியல் நடவடிக்கைகள் மூலமும், இராணுவ நடவடிக்கைகள் மூலமும் ஒரு இயக்கம் தனது இலக்கை அடையமுடியும். இராணுவ நடவடிக்கை மூலமும், அரசியல் நடவடிக்கை மூலமும் தன்னுடைய ஆற்றலை வெளிப்படுத்தி, இராணுவ அரசியல்ரீதியான போராளியாகத் திலீபன் விளங்கினான்.

மக்களின் அபிலாஷைகளுக்காக, மக்களின் மேம்பாட்டுக்காகவே ஒரு விடுதலைப் போராளி செயற்படுவான். சிந்திக்கும்பாணி என்பதற்குச் சான்றாகத் தியாகி திலீபன் விளங்கி நிற்கின்றான்.

எங்களுடைய தமிழ்த் தேசியத்தை வலுப்படுத்தி, அந்தச் சூழ்நிலைக்கு வழிப்படுத்தி, தமிழ் மக்களுடைய விடிவை - எதிர்காலத்தில் நாங்கள் காணவைக்கும் இன்றைய சூழ்நிலைக்குக் காரணமாக அமைந்தவன் தியாகி திலீபன்.

தேசியப் போராட்டம் - தாயகத்தைக் கடந்து, உள்நாட்டு எல்லைகளைக் கடந்து, சர்வதேச அளவில் விடுதலைப் போராட்டம் விரிவுபடுத்தப்படுமானால், அந்தப் போராட்டத்தின் உறுதியான வெற்றியை யாராலும் தடுக்கமுடியாது.

இந்தநிலையை எமது போராட்டம் அடைந்துகொண்டிருக்கிறது.

இடைக்கால் நிர்வாகத்தைத் தரக்கோரி, திலீபன் உண்ணாவிரதம் மேற்கொண்டபோது, இந்திய அரசாங்கம் அதைத் தூக்கி எறிந்தது. இன்று இடைக்கால நிர்வாகம் பற்றி சர்வதேச அளவில் பேச்சுக்கள் நடைபெறுகின்றன. சர்வதேச ரீதியாகவும் எமது போராட்டத்தின் நியாயப்பாடு சரியானது என் வெளிப்படுத்துகின்றனர். இதை யாராலும் தடுக்கமுடியாதிருக்கின்றது.

தமிழர்கள் தேசியரீதியாகவும், சர்வதேச அடிப்படையிலும் பலமாக இருக்கின்றார்கள். எவராலும் இதைத் தடுக்கமுடியாமல் உள்ளது.

சரியான கொள்கையில் சென்றுகொண்டிருக்கும்போது, சரியான தலைமைத்துவம் எம்மை வழிநடத்திச்செல்கின்றது. இன்று மக்களின் வாழ்க்கையை முன்னெடுக்கும் வகையிலான போராட்டத்தை நடத்திக்கொண்டிருக்கிறோம்.

மக்களின் விழிப்பும், தெளிவும் திலீபனின் கனவில் உருவானது. மக்களுக்கிடையே எத்தனையோ தீலிபன்னும், மில்லர்களும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்பது எமக்குத் தெரியும்.

வீறுகொண்டிருக்கின்ற மக்களே! நாங்கள் எதற்கும் தயாராக இருப்போம். நல்லதே நடக்கும் என்று நம்புவோம். அது நடந்தால், இலங்கைத்தீவிலுள்ள மக்கள் அனைவரும் மகிழ்ச்சியாக இருப்பார்கள்.

எதிரியும், எதிரிக்குத் துணை நிற்கும் சக்திகளும் துணை போகாமல், மாற்று முடிவுகளை எடுப்பார்கள். ஆனால், தமிழினம் மேலும் பலப்படும். அப்போது மக்கள் தங்களுக்குரிய தீர்வைத் தாமே பெற்றுக் கொள்வார்கள் என்று மேலும் அவர் தனது உரையில் குறிப்பிட்டார்.


### விமாணப்படைத்தளபதி பாகிஸ்தானுக்கு விஜயம்

(இஸ்லாமாபாத்)

விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் டொனால்ட் பெரேரா ஒரு வாரகால விஜயத்தை மேற்கொண்டு பாரிஸ"க்குச் சென்றுள்ளார். இவர் பாகிஸ்தான் விமானப்படையின் விருந்தினராக அங்கு தங்கியிருப்பார்.

இவர் பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர், கூட்டுப்படை நடவடிக்கைத தளபதிகளின் தலைவர் மற்றும் பாகிஸ்தானிய விமானப்படைத் தளபதியையும் சந்தித்துப் பேச்சுக்களை நடத்துவார் எனக் கூறப்படுகிறது.

## நல்லூர் இரதோற்சவத்தில் சில காட்சிகளின் பதிவுகள்







## 3 வருடங்களுக்கு முன் கொல்லப்பட்ட

# 2 லெபனானியரின் சடலங்களை இஸ்ரேல் நேற்றுக் கையளித்தது!

இஸ்ரேலுக்கும் லெபனானுக்கும் இடையில் கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற சண்டையில் கொல்லப்பட்ட 2 போர்வீரர்களின் சடலங்களை இஸ்ரேல் தற்போது லெபனானிடம் கையளித்துள்ளது.

மீண்டும் இஸ்ரேலுக்கும் லெபனானுக்கும் இடையில் சமாதான முயற்சியை ஆரம்பிக்கும் நோக்கிலேயே இந்தச் சடலக் கையளிப்பு இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சடலக் கையளிப்புக்கு லெபனானில் இயங்கும் ஹிஸ்புல்லா இயக்கத்தின் தலைவர் ஷேக் ஹசன் நஸரலியா என்பவரே முன்னின்று செயற்பட்டார் என்று கூறப்படுகிறது.

இந்தச் சமாதானத்தின் நோக்கம் கைதிகள் பரிமாற்றத்திற்காகவே முதலில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது,


இஸ்ரேல் எல்லையில் வைத்து ஹிஸ்புல்லா இயக்கத்தால் கைது செய்யப்பட்ட இஸ்ரேலியப் படைவீரர்களை மீட்பதும் - இஸ்ரேலியச் சிறைகளில் இருக்கும் 10 இற்கு மேற்பட்ட லெபனானியர்களை மீட்பதுமே இந்தச் சடலக் கைய ளிப்பின் முக்கிய நோக்கம் என்று தெரிவிக்கப்படுகிறது.

## கொலம்பியா விண்கல அறிக்கை செவ்வாய் வெளியிடப்படும்!

கொலம்பியா விண்கலம், விண்ணிலிருந்து நாஸா விண்வெளிநிலையத்திற்குத் திரும்பிக்கொண்டிருந்த போது, இடதுபக்க இறக்கையில் ஏற்பட்ட வெடிப்பால் நடுவானில் வெடித்துச் சிதறி, 7 விண்வெளி வீரர்கள் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பான அறிக்கை, வரும் செவ்வாயன்று வெளியிடப்படும் என்று நாஸா விண்வெளி ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த அறிக்கை 20 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் 248 பக்கங்களில் தயாரிக்கப்பட்டிருப்பது குறிப்படத்தக்கதாகும்.

# 2 பிரெஞ்சுப் படையினர் ஐவரிகோஸ்ரில் பலி!



ஐவரிக்கோஸ் நாட்டில் பிரெஞ்சுப் படைகளுக்கும் அங்கிருக்கும் தீவிரவாத அமைப்பிற்கும் இடையில் நடைபெற்ற சண்டையில் 2 பிரெஞ்சுப் படைவீரர்கள் கொல்லப்பட்டனர்.

பிரெஞ்சிலிருந்து ஐவரிக் கோஸ்ரிற்கு அனுப்பப்பட்ட சமாதானப்படையில், தீவிரவாத அமைப்பு நடத்திய தாக்குதலில் பிரெஞ்சுப் படைவீரர்கள் இருவர் கொல்லப்பட்டிருப்பது இதுவே முதன் முறையாகும். ஐவரிக்கோஸ்ற்றில் கொசு என்ற ஏரியில் காவல் கடமையில் இருந்தபோதே இந்தத் தாக்குதல் நடைபெற்றது என்றும் -

தாக்குதலை நடத்திய தீவிரவாதிகள் மதுபோதையிலேயே இந்தத் தாக்குதலை நடத்தினார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - கடந்த ஒரு வருடத்திற்கு முன்னர் ஐவரிகோஸ்ரில் தீவிரவாதிகளால் நடத்தப்பட்ட சதிப்புரட்சி முறியடிக்கப்பட்ட பின்னரே பிரெஞ்சுப் படைகள் அங்கு சமாதானப் பணிக்காகச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

# ஈராக்கில் சட்டம்-ஒழுங்கு சீர்குலைவு 400 பெண்கள் கடத்தப்பட்டு கற்பழிப்பு!

ஈராக்கில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்ததால், 400 இற்கு மேற்பட்ட பெண்கள் கடத்தப்பட்டு கற்பழிக்கப்பட்டனர் என ஈராக் மகளிர் விடுதலை அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு மேலும் கூறுகையில் -

ஈராக்கில் சதாம் ஹுசைன் தலைமையிலான ஆட்சி அகற்றப்பட்டு அமெரிக்கப் படையினரின் நிர்வாகம் கடந்த நான்கு மாதங்களாக நடைபெற்று வருகிறது.



நிர்வாகக் கட்டுப்பாடு இல்லாத காரணத்தால் சட்டம் - ஒழுங்கு சீர்குலைந்துவிட்டது. மகளிருக்கு எதிரான குற்றங்கள் வரலாறு காணாத அளவுக்கு நடந்து வருகின்றன. சமூக விரோதிகளால் 400 இற்கும் மேற்பட்ட பெண்கள் கடத்தப்பட்டு கற்பழிக்கப்பட்டுள்ளனர். பல இடங்களில் பெண்களை சமூக விரோதிகள் கடத்தி விற்பனை செய்து வருகின்றனர். பெண்களுக்கு எதிராக நாள்தோறும் நடந்துவரும் இத்தகைய குற்றச் செயல்களைத் தடுக்க அமெரிக்கப் படையினரால் இயலவில்லை என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

# டேவிற் கெலி தற்கொலை விவகாரம்; புலனாய்வுத்துறை அதிகாரி சாட்சியம்!



பிரிட்டிஷ் ஆயுத நிபுணர் டேவிட் கெலி தற்கொலைசெய்துகொண்ட சம்பவம் தொடர்பாக அமைக்கப்பட்ட விசாரணைக் குழுவின் முன், பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயரின் பிரதம புலனாய்வு ஆலோசகர் ஜோன் ஸ்காலற் நேற்று சாட்சியமளித்தார். இவர் 30 ஆண்டுகளாக பிரிட்டிஷ் புலனாய்வுத் துறையில் பதவி வகித்துள்ளார்.

கெலி தற்கொலை செய்வதற்கு 3 நாட்களுக்கு முன்னர் இந்தப் புலனாய்வு அதிகாரி கெலியைத் துருவித்துருவி விசாரணை செய்தார் என்றும் -

சதாம் ஹுசைனால் பிரித்தானியாவுக்கு ஆபத்து வருமா என்ற கருத்தை, இந்தப் புலனாய்வு அதிகாரியிடம் பிரித்தானிய அரசின் பிரதம அலுவலக அதிகாரிகள் கேட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஈராக்கின் ஆயுதங்கள் பற்றிய தகவல்கள் கெலிக்குத் தெரியும் என்ற செய்தியையும் இந்தப் புலனாய்வு அதிகாரிதான் பகிரங்கப்படுத்தினாரா என்ற சந்தேகமும் தற்போது எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# பங்களாதேஷ் எதிர்க்கட்சித் தலைவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொலை!

பங்களாதேஷில் பிரதான எதிர்க்கட்சியான அவாமி லீக் கட்சியின் உயர் தலைவர் மொஞ்சுருல் இமாம் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பங்களாதேஷின் தென்மேற்கு நகரமான குல்னாவில் நேற்றுமுன்தினம் இச்சம்பவம் நிகழ்ந்தது. அவாமி லீக் கட்சியின் குல்னா பகுதி தலைவராக இருந்துவந்த அவர் - வழக்கறிஞராகவும் பணியாற்றி வந்தார். குல்னா நகர நீதிமன்றத்துக்குச் செல்ல முற்பட்டபோது அடையாளம் தெரியாத நபர்கள் அவரை சுட்டுக்கொலை செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.


## படமும் செய்தியும்




இந்தோனேஷியாவின் ஜகார்த்தாவில் சேரிப்புறங்களில் வாழும் மக்களின் குடியிருப்புக்களை நகர அதிகாரிகள் அகற்றி மக்களை வெளியேற்றுவதையும் - வெளியேறும் பெண்ணொருவர் தன்குழந்தையுடன் அழும் காட்சி.





இந்தியாவின் மும்பாய் நகரில் நடந்த குண்டுத் தாக்குதலில் 50 பேர் கொல்லப்பட்டதைக் கண்டித்து, பயங்கரவாதத்துக்கு எதிரான அமைப்பு மும்பாய் நகரில் ஆர்ப்பாட்டம் நடத்துவதைப் படத்தில் காணலாம்.



பிரேசிலின் அல்கன்ரறா விண்வெளித் தளத்தில், அண்மையில் இடம்பெற்ற றொக்கட் விபத்தில் ஏற்பட்ட சேதத்தைத் தொழில்றுட்பவியலாளர்கள் பார்வையிடும் காட்சி.

# இரு முஸ்லிம் தீவிரவாதிகள் இஸ்ரேல் படையினரால் கைது!



மேற்குக்கரை நகராகிய நப்லஸ்சில் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த வேளை - இரு பலஸ்தீனிய முஸ்லிம் தீவிரவாதிகள் இஸ்ரேல் படையினரால் கைதுசெய்யப்பட்டார்கள்.

இஸ்ரேலியப் படையினருடன் நடந்த சண்டையில் இருவரும் காயமடைந்து வெள்ளியன்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்கள்.

கைதுசெய்யப்பட்ட இருவரும் வுல் அகுசா தியாகிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் எனவும் - பலஸ்தீனியத் தலைவர் யசீர் அரபாத்தின் பற்றா இயக்கத்துடன் தொடர்புடையவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

நடிலஷ் என்ற இயக்கத்தின் தலைவர் காலெட் நம்றூடி வைத்தியசாலையின் கூரையினூடாக வெளியேற முயன்றபோது சுட்டுக்கொல்லப்பட்டார்.

கைதுசெய்யப்பட்டவர்கள் இஸ்ரேலியர்களுக்கு எதிரான தாக்குதலில் ஈடுபட்டுள்ளார்கள் எனவும் - 10 பேர்வரை கொல்லப்பட்டதற்கு காரணமாக இருந்தார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# தென்னிலங்கை மாணவர்கள் யாழ்ப்பாணத்தில் சுற்றுலா!

தென்னிலங்கையில் இருந்து ஒரு தொகுதி மாணவர்கள் கல்விச் சுற்றுலாவை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

கொழும்பு மாவட்டத்தில் - மூன்று பிரபல பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களே இவ்வாறு கல்விச்சுற்றுலாவை மேற்கொண்டுவந்துள்ளனர்.

இவர்கள் நேற்று மாலை யாழ்ப்பாண நீதிமன்றத்தில் நீதிபதி விக்னராஜாவைச் சந்தித்து கலந்துரையாடினர்.

ஒருவாரகாலத்திற்கு இங்குதங்கவுள்ள மாணவர்கள், யாழ்ப்பாணத்தின் பல்வேறு இடங்களைப் பார்வையிடவுள்ளதாகவும், இன ஒற்றுமையை பலப்படுத்தும் வகையில் சந்திப்புக்களை நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபடும் பொலிஸார் மீது கடும் நடவடிக்கை!

## பொலிஸ் மா அதிபர் அறிக்கை

பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படும் வகையில், சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது - கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று, பொலிஸ மா அதிபர் ரீ.ஈ. ஆனந்தராஜா தெரிவித்தார்.

பொதுமக்களிடமிருந்து வரும் இவ்வாறான முறைப்பாடுகள் தொடர்பாக, உடனடியாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பிராந்தியத்தின் பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளதாக - பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.

அண்மையில் சபுகஸ்கந்தை பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் சிலர் இரண்டு யுவதிகளை மயானம் ஒன்றுக்கு அழைத்துச் சென்று, பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியமை குறித்து பொலிஸ் மா அதிபர் விசேட கவனம் செலுத்தி வருகிறார்.

இச்சம்பவம் தொடர்பான அறிக்கை ஒன்றை - பொலிஸ் மா அதிபர் கேட்டுள்ளார்.

பொலிஸ் திணைக்களத்துக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில், ஒழுங்கீனமாக நடக்கும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்போவதாக பொலிஸ் மா அதிபர் ரீ.ஈ.ஆனந்தராஜா தெரிவித்துள்ளார்

# யாழ்ப்பாணத்தில் காணாமற்போன 4 பேர் குறித்து ஆட்கொணர்வுமனு!

குடாநாட்டில் 1996, 1997 ஆம் ஆண்டுகளில் படையினரால் கைது செய்யப்பட்டு, காணாமற்போன நான்கு பேர் தொடர்பான ஆட்கொணர்வு மனு- கடந்த வெள்ளியன்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுக்கள் மீதான விசாரணை, எதிர் வரும் 8 ஆம் திகதி இடம் பெறவுள்ளது. 1996 ஆம் ஆண்டு ஜூலை மாதம் கொடிகாமம் பகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாமல் போன நான்கு பேர் தொடர்பான- இந்த ஆட்கொணர்வு மனுவை, மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான அமைப்பின் சட்டத்தரணி எம்.ரெமடியஸ் தாக்கல் செய்தார்.

அன்ரனி அனிஸ்டன் (பாசையூர்), ஆசீர்வாதம் பெர்னாண்டோ ஜெயகாந்தன் (பாசையூர்), வேலுப்பிள்ளை உதயகுமார் (கொடிகாமம்), மைக்கல் பேர்ணாட் ஜோன்சன் (கொழும்புத்துறை) ஆகியோர் தொடர்பான இந்த மனு மீதான விசாரணை நேற்று முன்தினம் இடம்பெறவிருந்தது.

எனினும் தவிர்க்க முடியாத காரணத்தால், மேல் நீதிமன்ற நீதிபதி எஸ். வரதராசா நீதிமன்றுக்குச் சமூகம் கொடுக்காததால், இவ் வழக்கு விசாரணைகள் எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டன.

# வவுனியாவில் பொங்கு தமிழ் நிகழ்வு படையினர் தொடர்ந்து அச்சுறுத்தல்!

வவுனியாவில் எதிர்வரும் 15 ஆம் திகதி பொங்கு தமிழ் நிகழ்வுக்கான ஏற்பாடுகள், பொங்கு தமிழ் குழுவினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதேவேளை - படையினர், அரச ஊழியர்கள் அதில் கலந்து கொள்ளக் கூடாது என்ற தோரணையிலான அச்சுறுத்தல்களை விடுத்து வருகின்றனர்.

இதற்கான ஏற்பாட்டுக் கூட்டத்தில் - தமிழர்களான அரச ஊழியர்கள் கலந்து கொண்டமை தொடர்பாக, வவுனியா இராணுவத்தினர் அவர்களிடம் விளக்கம் கோரியுள்ளனர். இது தொடர்பாக, வவுனியா அரச அதிபரிடமும் விளக்கம் கேட்டிருப்பதாகவும் அவ்வாறு கேட்பதற்கு தமக்கு அதிகாரம் இருப்பதாகவும் படைத்தரப்பு கூறியுள்ளது.

இது தமது அபிலாசைகளை வெளிப்படுத்துவதற்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல் என அரச ஊழியர்கள்- போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு முறைப்பாடு செய்துள்ளனர். அத்துடன், பாடசாலை மாணவர்களையும் பொங்குதமிழ் நிகழ்வில் பங்குகொள்ள அனுமதிக்கக் கூடாதெனவும், படைத்தரப்பு கூறியுள்ளது.

இதேவேளை - பொங்கு தமிழ் நிகழ்வில் தமிழீழத் தேசியக்கொடியை ஏற்றக் கூடாதெனவும் ஏற்பாட்டாளர்களை படையினர் வற்புறுத்துவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது

## சந்நிதியில் இன்று கொடியேற்றம்

வரலாற்றுப் பிரசித்திபெற்ற தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த மஹோற்சவம் - இன்று பின்னிரவு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. தொடர்ந்து 14 தினங்கள உற்சவம் நடைபெறும்.

அடுத்தமாதம் 9 ஆம் திகதி தேர்த திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

## பக்தர் வெள்ளத்தில் நசியுண்டு காயம்

நல்லூர் தேர்த்திருவிழாவின் போது, சனநெரிசலில் வீழ்ந்து நசியுண்டதால் குடும்பஸ்தர் ஒருவர் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பால சண்முகநாதன் என்பவரே நசியுண்டு உடலில் காயங்களுக்குள்ளாகி வைததியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றார்.

தேர்த்திருவிழா உற்சவத்தில் திரண்டிருந்த பக்தர் வெள்ளத்தில் தவறி வீழ்ந்ததால், இவர் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

# பிளவு ஏற்படும் நிலையில் தென்மாகாண ஆளும்கட்சி

(கொழும்பு)

தென்மாகாண ஆளும்கட்சி உறுப்பினர்களில் ஒருபிரிவினர் தனித்து செயற்படுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாக தெரியவருகின்றது.

தென்மாகாண முதலமைச்சரின் தன்னிச்சையான அதிகாரப்போக்கை எதிர்த்தே தனித்துச் செயற்படப்போவதாக உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில், பொதுஜன ஐக்கிய முன்னணியின் அதிகாரத்தில் இருக்கும் இந்த மாகாணசபையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி குறித்து ஜனாதிபதிக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புலிகளின் குரல் நிறுவனத்தின் சிறப்பு கலையரங்கம் நல்லூரில்

(யாழ்ப்பாணம்)

புலிகளின் குரல் நிறுவனம்- கேணல் கிட்டு, தியாகி லெப்.கேணல் திலீபன், நினைவாக நடத்தும் சிறப்பு கலையரங்கம் - நேற்று நல்லூரில் இடம்பெற்றது.

நேற்றுமாலை 6 மணிக்கு ஆலய வீதியில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பெருமளவான மக்கள் திரண்டு பார்வையிட்டனர்.

மூன்று தினங்கள் தொடர்ந்து இடம்பெறும் நிகழ்வுகளில் முதல் நாள் நிகழ்வில், முள்ளியவளை தமிழ் மகாவித்தியாலய மாணவர்களின் பண்டாரவன்னியன் நாட்டுக் கூத்து இடம்பெற்றது.

இந்த நிகழ்வுகளைத் தொடர்ந்து- இன்றும், நாளையும் ஆலய வீதியில் பலவேறு கலை நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

## ஜே.வி.பியுடனான கூட்டணி...

ஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் பல கட்சிகள் சுட்டிக்காட்டியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

எனினும், இந்த கட்சிகளின் தலைவர்களுடன் ஜனாதிபதி உத்தேச கூட்டமைப்பு தொடர்பாக, அடிக்கடி பேச்சுவார்த்தை நடத்துவார் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தக் கூட்டமைப்பு தொடர்பாக இன்று விசேட பேச்சுவார்த்தை ஒன்று இடம்பெற உள்ளதாக, மக்கள் விடுதலை முன்னணியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

இதுவரை நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது இணக்கம் காணப்படாத விடயங்கள் தொடர்பாக ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்த உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

**யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் யாழ்ப்பாணம்.**

**யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் யாழ்ப்பாணத்தின் பொதுக்கூட்டம் எதிர்வரும் 31.08.2003 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும். அனைத்துப் பழைய மாணவர்களையும் அன்புடன் அழைக்கின்றேன்.**

SRIKUMARAN
26.08.2003 (சி-1411) அதிபர்

## பொலிஸ்...

துவது குறித்து பிரதமரும், அமைச்சர் ஹக்கீமும் நேற்று ஆராய்ந்துள்ளனர்.

இந்த விடயம் குறித்து தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் சமாதானப் பேச்சுவார்த்தை மீண்டும ஆரம்பிக்கும்போது விடுதலைப் புலிகளுடன் கலந்துரையாடுவது பற்றியும் நேற்றைய சந்திப்பின்போது ஆராயப்பட்டதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குற்றச்....

யில் இருந்து ஓய்வுபெற்ற அதிகாரி சந்திரா விக்கிரமசிங்க, முன்னாள் பொலிஸ்மா அதிபர் பிராங் டி சில்வா ஆகியோர் இந்தக் குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

நாட்டின் சட்டத்தையும், ஒழுங்கையும் பாதிக்கும்வகையில் கடந்த இரண்டு தசாப்தகாலத்தில் குற்றச் செயல்கள் அதிகரித்துவருகின்றனவா என்று கண்டறியும் பொறுப்பு இந்த ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளதாக, ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு குற்றச்செயல்கள் அதிகரிப்பதற்கு, பொறுப்புவாய்ந்த அரச அதிகாரிகள் எவராவது உடந்தையாக இருந்தனரா என்பதையும் ஆணைக்குழு கண்டறியவேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கு, எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் எவை என்பது பற்றி பிரேரிக்கவேண்டுமென இந்த ஆணைக்குழு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் - ஆணைக்குழு தமது அறிக்கையை மூன்று மாத காலத்துக்குள் சமர்ப்பிக்கவேண்மென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சட்டவிரோதமான ஆயுதங்கள்: பொதுமன்னிப்பால் பயனில்லை

## உள்துறை அமைச்சர் தெரிவிப்பு

சட்டவிரோத ஆயுதங்களை ஒப்படைக்க அரசாங்கம் வழங்கியிருந்த பொதுமன்னிப்பு காலத்தில், எதுவித பயனும் கிட்டவில்லை என உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார். இதற்கென வழங்கப்பட்டிருந்த காலத்தில் எந்தவித ஆயுதங்களும் ஒப்படைக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டில் இடம்பெறும் குற்றச் செயல்களை கட்டுப்படுத்துவதில், தாம் எதிர்நோக்கும் பிரதான சிக்கல் - சட்டவிரோத ஆயுதங்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவத்திலிருந்து விலகிச் சென்ற பெரும் எண்ணிக்கையானோர் நாடு முழுவதும் இருப்பதாகவும், இவர்கள் வசம் பல்வேறு ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்கள் உள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நடந்த வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்தில் அமைச்சர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

# கல்விசாரா ஊழியர்களின் கோரிக்கைகளை அரசு ஏற்பு

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் கோரிக்கைகளுக்கு ஏற்ப, அவர்களுக்கான சம்பள முரண்பாட்டை நிவர்த்தி செய்வதற்கான சுற்றறிக்கையை - பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

ஐந்து மாதங்களுக்கான ஐயாயிரம் ரூபா கொடுப்பனவில் மூவாயிரத்து 300 ரூபாவை இந்த மாதமே வழங்குவதற்கான சுற்றறிக்கை நேற்று அனுப்பி வைக்கப்பட்டதாக மூன்றாம் நிலைக்கல்வி அமைச்சு, அறிவித்துள்ளது.

இதேவேளை, ஏனைய மூன்று சம்பள முரண்பாடுகள் தொடர்பாகவும், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு நேற்று சுற்றறிக்கை ஒன்றை அனுப்பி வைத்துள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

## சுகாதார...

வைத்தியசாலைகளும் நேற்று செயலிழந்து காணப்பட்டன. இதற்கிடையில் நேற்றைய சுகாதார ஊழியர்களின் போராட்டத்தால் யாழ்.போதனா வைத்தியசாலையின் செயற்பாடுகளும் மந்தகதியிலேயே நடைபெற்றன.

வெளிநோயாளர் பிரிவு உட்பட சலக பணிகளிலும் ஆட்பற்றாக்குறை நிலவியமையால் நோயாளிகள் பிரிவும் சிரமத்திற்கு உள்ளாகியிருந்தமை அவதானிக்கமுடிந்தது.(01)

## மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல: 1541 திகதி: 26.08.2003

வெற்றி இலக்கங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| C | 1 | 6 | 6 | 5 | 2 | 7 |

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.50 | 96.90 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 151.23 | 152.84 |
| 1 யூரோ | 104.28 | 105.90 |
| 1 சுவிஸ் பிராங் | 67.68 | 68.90 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 61.28 | 61.35 |
| 1 ஜப்பானிய யென் | 00.81 | 00.82 |
| 1 சவூதி றியால் | 23.00 | 28.00 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 27-.08.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.